# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2003, ஐப்பசி 23 உ. (8-11-72) புதன் றம்ழான் 28 | புத்தகம்25 இதழ் 49

## நாலாவது மாடியில் கவிஞர் காசி ஆனந்தன்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் கடந்த வாரம் விசாரணைக்காக கொழும்பு கோட்டையிலுள்ள சி. ஐ. டி. தலைமையலுவலகத்துக்கு (4வது மாடி) அழைத்துச்செல்லப்பட்டதாக தெரிகிறது. கவிஞர் நீண்ட தாடியுடன் காணப்பட்டதாக கண்டவர்கள் தெரிவித்தனர்.

காசி ஆனந்தன் சிறையிலடைக்கப்பட்டு இன்றுடன் 149 நாட்கள் ஆகின்றன.

# பொலிசுத் தெரிவில் பாரபட்சம்!

## பிரதி அமைச்சரின் விந்தையான கணக்கு!

25.10.72 அம் திகதி திரு. இரத்தினம் பா. உ. தேசியப் பேரவையில் பிரதம அமைச்சரிடம் அவருடைய அரசாங்கம் இன்றுவரை நியமித்த பொலிசுகாரரில் சிங்களவர் தமிழர் முஸ்லிம் எத்தனைபேர் என்றும், எத்தனை பேர் விண்ணப்பித்தவர்கள் என்றும் கேட்டார். இதற்குப் பிரதி அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி கூறிய விடையைக் கீழே காண்க:

**விண்ணப்பித்தோர்**

சிங்களவர்— 56087 பேர்
தமிழர் — 5,447 பேர்
முஸ்லிம்கள்— 2533 பேர்

**நியமனம் பெற்றோர்**

சிங்களவர் —2566 பேர்
தமிழர் —128 பேர்
முஸ்லிம்கள் —107 பேர்

விண்ணப்பித்தவர்களில் 4 விகிதம்பெரும்பான்மை இன மக்களும் (சிங்களவர்) 6 விகிதம் தேசிய சிறுபான்மை இனத்தவர்களும் நியமனஞ் செய்யப்பட்டனர் எனவும் அவர் கூறினார். இக்கூற்று சிறுபான்மையினர் கூடுதலாக நியமிக்கப்பட்டனர் என்பதை நிரூபிக்கின்றது. 6 விகிதம் எப்படிக் கணக்கிடப்பட்டது. இது விநோதமான விந்தையான கணக்கு உண்மைக்குத் திரைபோட்டு மறைக்கும் கணக்கு! உண்மையான கணக்கு என்ன?

விண்ணப்பித்த 56087 சிங்களவரில் 2566 பேர் அதாவது 4.6 விகிதம் பேர் நியமனம் பெற்றனர்.

விண்ணப்பித்த 5447 தமிழரில் 128 பேர் அதாவது 2.4 விகிதம் பேர் நியமனம் பெற்றனர்.

விண்ணப்பித்த 2533 முஸ்லிம்களில் 107 பேர் அதாவது 4.2 பேர் நியமனம் பெற்றனர்.

சிங்களவருடைய வீதத்திலும் அரைப்பங்கு வீதத்தினரே அதாவது சிங்களவரின் தொகை வீதத்தில் அரைவாசி வீதத்தினரே தமிழரில் நியமனம் பெற்றுளர் சிங்களவரும் தமிழரும் ஒரே வீதத்தினராக இருக்கவேண்டுமானால் இன்னும் 122 தமிழர் நியமிக்கப்படவேண்டும்.

முஸ்லிம்களும் தமிழரும் ஒரே வீதத்தினராக இருக்கவேண்டுமெனின் இன்னும் 101 தமிழர் நியமிக்கப்படவேண்டும்.

பிரதி அமைச்சர் கணித்தபடி சிறுபான்மை இனங்களாகிய தமிழரையும் முஸ்லிம்களையும் சேர்த்துக் கணித்தாலும் மொத்தமாக விண்ணப்பித்த 7980 பேரில் 235 பேர் அதாவது மூன்று வீதத்தினரே நியமனம் பெற்றுளர்.

இந்த மூன்று வீதத்தை ஆறு வீதம் என்று கணித்துக் 'கணக்குவிட்டதற்கு' யார் பொறுப்பானவர்? இதனைத் திரு. இரத்தினம் கேட்பதற்கு ஒரு கேள்வியை மீண்டும் அனுப்பியுள்ளார்.

காங்கேசன்துறை இடைத்தேர்தல்

## கம்யூனிஸ்ட் கட்சி தயக்கம்!

## ஆளுங்கட்சிக்குள் குழப்பம்!

### கட்டுப்பணம் இழக்கும் ஆளை கண்டு பிடிப்பதில் தளப்பம்!

காங்கேசன்துறைத் தொகுதி இடைத்தேர்தலில் தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வாவை எதிர்த்து அரசாங்கத்தின் சார்பில் யாரை நிறுத்துவது என்று புரியாமல் ஆளுங் கட்சியினர் திக்குமுக்காடித் திணறிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

தந்தை செல்வாவுடன் போட்டியிடுபவர் கட்டுப்பணம் இழப்பது நிச்சயம் என்பதை அரசாங்கம் உள்ளூர உணர்ந்திருந்தாலும் தந்தை செல்வா போட்டியின்றித் தெரிவு செய்யப்படுவதை அது விரும்பவில்லையாம். எனவே கட்டுப்பணம் இழக்கவிருக்கும் தனது வேட்பாளர் யார்? என்பதை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஆளுங்கட்சியினர் இறங்கியுள்ளனர்.

வழமையாக ஒவ்வொரு பொதுத்தேர்தலிலும் காங்கேசன் துறைத் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்து வந்துள்ள ஆளுங் கட்சிகளில் ஒன்றான கொம்யூனிஸ்டு கட்சி வரவிருக்கும் இடைத்தேர்தலில் போட்டியிட தயக்கம் காட்டி வருகிறது. தமிழ் மக்களின் தேசிய எழுச்சிக்கு மதிப்புக் கொடுக்காவிட்டால் தமிழ்ப்பகுதியிலிருந்தே தாம் முற்றாக கெல்லி எறியப்படுவது நிச்சயம் என்று கொம்யூனிஸ்டுகள் கருதுகிறார்களாம்!

ஆனால் அதே வேளையில் கொம்யூனிஸ் கட்சிபோட்டியிட முன் வராவிட்டால் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு காங்கேசன்துறைத் தொகுதியை விட்டுக் கொடுக்க வேண்டுமென்றும் சுதந்திரக்கட்சியின் சார்பில் போட்டிக்கு ஆளை நிறுத்த தாம் தயார் என்றும் குமாரசூரியர் கொக்கரித்து உள்ளாராம்.

இப்போது சு. கட்சி சார்பில் கட்டுப்பணம் இழக்கும் வேட்பாளர்களாக முருகையா, சிதம்பரநாதன், அல்பிரட், துரையப்பா, ஆகியோரது பெயர்கள் அடிபடுகின்றன.

இதே நேரத்தில் சுதந்திரக் கட்சியிலுள்ள பல சிங்கள பா. உக்கள் குமாரசூரியரையே காங்கேசன்துறை இடைத்தேர்தலில் போட்டியிடும்படி நெருக்குகின்றனர். இதனால் குமாரசூரியர் மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது கஷ்டப்படுகிறாராம்.

### ஓர் அறிவிப்பு

சில தவிர்க்க முடியாத காரணங்களால் 5-11-72, 12-11-72 ஆகிய இரு ஞாயிறுகளிலும் வெளிவரவேண்டிய சுதந்திரனுக்கு பொதுவாக 8-11-72 திகதியுடன் இந்த இதழ் வெளிவருகிறது. வாசகர்கள் பொறுத்தருளவேண்டுகிறோம். அடுத்த 19-11-72இதழ்முதல்சுதந்திரன் வழமைபோல் கிடைக்கும்.

—நிர்வாகி.

வடக்கு கிழக்கில்

# பிறப்புப் பதிவு இனித்தமிழில்!

## நடைமுறைத் தமிழியக்கத் தலைவரின் பதின்மூன்று மாதப் போராட்டம் வெற்றி!

### தந்தை செல்வாவுக்கு பீலிக்ஸ் கடிதம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிள்ளைகளின் பிறப்புச் சாட்சிப் பத்திரம் தமிழ் மொழியிலேயே பதியப்படவேண்டுமென்று நடைமுறை தமிழ் இயக்கத்தினரும் பண்டிதர் இரத்தினம்— தந்தை செல்வா ஆகியோரும் தொடர்ச்சியாக எடுத்த நடவடிக்கை வெற்றி அளித்துள்ளது.

தந்தை செல்வாவுக்கு உள்நாட்டமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இதுசம்பந்தமாக அனுப்பியுள்ள கடிதமொன்றில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிறப்புப் பதிவுகளை ஆங்கிலத்துக்கு பதில் தமிழில் பதிவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி பதிவாளர் நாயகத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

பதின்மூன்று மாதங்களுக்குமுன் நடைமுறைத் தமிழ் இயக்கத் தலைவர் இளையதம்பி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் தமது பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழை எடுக்கச் சென்றபோது அது அவருக்கு ஆங்கிலத்திலேயே வழங்கப்பட்டது. அதை ஏற்றுக்கொள்ள மறுத்த அவர் தமிழ்மொழியிலேயே பிறப்புச்சான்றிதழ் தமக்கு வழங்கப்படவேண்டும் என்று கோரினார். அவரது கோரிக்கை மறுக்கப்படவே எப்படியும் தமிழிலேயே பிறப்புச் சான்றிதழை பெற்றுக்கொள்வது என்று திடசங்கற்பம் எடுத்துக்கொண்டார்.

யாழ் மாவட்ட வைத்திய அதிகாரி, யாழ மாவட்டப் பதிவாளர், பதிவாளர்நாயகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோருடன் தொடர்ச்சியாக தமது கோரிக்கையை வலியுறுத்தி கடிதப் போர் நடத்தினார். தாம் எழுதிய கடிதங்கள் அனைத்தையும் தனித் தமிழிலேயே எழுதினார்.

திரு. இளையதம்பியின் கோரிக்கைக்கு பக்கபலமாக தந்தை செல்வாவும் பண்டிதர் இரத்தினமும் இருந்தனர். வடக்கு கிழக்கில் பிறப்புப்பதிவு தமிழிலேயே பதியப்படவேண்டும். என்பதை வலியுறுத்தி தந்தை செல்வாவும் அமைச்சருக்கு கடிதம் எழுதினார். யாழ்மாநகர சபையிலும் இதையொட்டி

(7-ம் பக்கம் பார்க்க)

### நவம்பர் 29 நியமனப் பத்திரம் தாக்கல்

காங்கேசன் துறைத் தொகுதி இடைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் நவம்பர் 29-ம் திகதி யாழ் கச்சேரியில் தாக்கல் செய்யப்படும்.

### ஆட்சியாளரின் சின்னத்தனம்!

வழங்கிய சம்பளத்தை திரும்பப் பெற்றனர்!

அரசாங்க ஊழியராகவிருந்த வண்ணை. ஆனந்தன் (ஆனந்தவிநாயகம்) வெலிக்கடைச் சிறைச்சாலையில் எதுவித காரணமும் இன்றி தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார் அல்லவா? இவரை இவர் வகித்த வேலையிலிருந்து அரசு தற்காலிகமாக நீக்கி வைத்திருப்பதாக அறிவித்துள்ளது.

தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுமுன் அவருக்கு வழங்கப்பட்ட சம்பளப்பணத்தையும் திருப்பித் தரும்படி அரசு கேட்டு வாங்கிவிட்டதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# தமிழ் மக்கள் கண்ணில் மண்ணைத் தூவும்

## தினபதியின் அயோக்கியத்தனம்!

## மொழிபெயர்ப்புக்கும் பதிலுக்கும் வேறுபாடு புரியாதவரா தினபதி ஆசிரியர்?

### அரசபேரவைப் பேச்சைத் திரித்து ஆரவாரம்!

தினபதியின் போக்கிரித்தனம் எல்லையின்றிப் போகின்றது. அரசாங்கத்துக்கும் அடிமைத்தர்பார் நடத்தும் அமைச்சருக்கும் ஆலவட்டம் குஞ்சம் குடைபிடித்து அரசாங்கத்தின் தயவை நாடிநிற்கும் இச்சாக்கடை ஏடு தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றும் வித்தையை இன்னும் கைவிடவில்லை.

தமிழ் மக்கள் தமிழில் எழுதுங் கடிதங்களுக்குச் சிங்களத்தில் மறுமொழியும் தமிழில் மொழிபெயர்ப்பும் அனுப்புவதே எங்கள் கொள்கை என அரசாங்கம் கூறித் தமிழ் மக்களை அடிமைகளாக நடத்துகின்றது. தமிழில் மொழி பெயர்ப்பு அனுப்பாமல் தனிச் சிங்களக் கடிதங்களையே அனுப்புகின்றது; ஆங்கில மொழி பெயர்ப்பையும் அனுப்புகின்றது. உத்தியோகத்தர்கள் விரும்பினால் அரைகுறைத் தமிழ் மொழி பெயர்ப்பு அனுப்பப்படும்.

தமிழ் மொழி பெயர்ப்பைத்தானும் அனுப்பாவிட்டால் ஏன் அனுப்பவில்லை என்றுகூட கேட்க உரிமையில்லாத நிலையில் தமிழர் அடிமைகளாக — மொழி உரிமை இழந்து வாழ்கின்றனர். இந்த அடிமை நிலையை ஒழிக்கவும், தமிழுக்கும் ஆட்சி உரிமை பெறவும், தமிழில் மறுமொழி முதலியவற்றைப் பெறவும், தமிழில் எல்லா அலுவல்களையும் அரசாங்கத்துடன் செய்யவும் சட்ட உரிமைபெற தமிழ் மக்கள் தீவிரமாகப் போராடுகின்றனர்.

இந்தப் போராட்டத்தை முனை முறிக்க—திசைதிருப்ப அரசாங்கத்துடன் சேர்ந்து அமைச்சர் குமாரசூரியரும் "பனி சிமோன் இராசன் துரை" கும்பலும் துரோகஞ் செய்கின்றனர். தமிழ்த் துரோகிகள் — தமிழினத் துரோகிகள் பட்டியலில் மேலும் சிலர் புகுத்தப்படுகின்றனர். இந்தத் துரோகக் கும்பலுடன் இணைந்து நின்று தமிழினத்துக்குப் பெருந் துரோகச் செயலை எப்பொழுதும் எல்லாத்துறைகளிலுஞ் செய்து வரும் ஒரே ஒரு ஏடு தினபதி. ஒரே ஒரு பத்திராதிபர் அந்த ஏட்டின் ஆசிரியர் சிவநாயகம்.

21-7-72ல் இந்தத் தினபதி துணிந்து ஒரு செய்தியை முற்பக்கத்தில் முதன்மைச் செய்தியாகப்போட்டுத் தமிழ் மக்களை ஏமாற்றியது. இந்தச் செய்தியிலுள்ள பொய்யையும் புரட்டையும் அரசாங்கமும் மக்களும் அறிதற்காக ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் தேசிய அரசுப் பேரவையில் 19-10-72இல் இச் செய்தி உண்மையா என்று பிரதம அமைச்சரைக் கேட்டார். அவருடைய உரையைக் கீழே காண்க.

"அடுத்த வினா கௌரவ பிரதம அமைச்சரைக் கேட்பதாகும். இது "அமைச்சரவை முடிவு" பற்றியதாக இருக்கின்றபடியால் இக் கேள்வியை நான் அமைச்சரவைத் தலைவரிடத்திலேயே கேட்க விரும்புகிறேன்.

நான் இங்கு குறிப்பிடப் போகின்ற செய்தி 1972, ஜூலை மாதம் 21ஆம் தேதி வெளிவந்த தினபதியிலே முதற்பக்கத்திலே முதன்மைச் செய்தியாக இருக்கின்றது. இது "அமைச்சரவை முடிவு" என்று இருக்கின்றது. இதில் தமிழ் மொழியைப்பற்றிய சில செய்திகள் வெளிவந்திருக்கின்றது. அவற்றைச் சுருக்கமாக வாசிக்கவிருக்கிறேன்:

"ஆங்கிலம் முற்றாக அகற்றப்படும்

தமிழ்க் கடிதங்களுக்குத் தமிழிலே பதில்

● சகல அமைச்சுக்களிலும் தமிழ்த் தட்டெழுத்தாளர்கள், எழுதுவினைஞர்கள் நியமிக்கப்படுவர். நிதி ஒதுக்குவதற்கு மந்திரி சபைக் கூட்டத்திலே என். எம். இணக்கம். பொதுமக்கள் அரசாங்க அலுவலகங்களுக்குத் தமிழில் கடிதம் எழுதினால், தமிழிலே பதில் கிடைக்கும்."

If the public write in Tamil they will get a reply in Tamil.

"இதற்காகச் சகல அமைச்சுக்களிலும் தமிழ்த் தட்டெழுத்தாளர்களும் எழுதுவினைஞர்களும் நியமிக்கப்படநிதி ஒதுக்கப்படும். கடந்த புதன் கிழமை நடந்த மந்திரிசபைக் கூட்டத்திலே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது."

These decisions were taken at the Cabinet meeting held on the Wednesday before 21st July, 1972.

இந்தச் செய்தி உண்மையா என்பதையும் தமிழிலே கடிதம் எழுதுகின்றவர்களுக்குத் தமிழிலே பதில் அனுப்பப்படுமென்று அமைச்சரவை முடிவு செய்ததா என்பதையும் அப்படி முடிவு செய்தது என்றால் அதற்காக மேலும் அமைச்சரவை நடவடிக்கை எடுத்திருக்கின்றதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மொழி உரிமைப் பிரச்சினையாக இருப்பதால் இந்தப் பத்திரிகைச் செய்தியினால் மக்கள் மயங்குகின்ற ஒரு நிலையைத் தெளிவாக்க வேண்டுமென்றும் தமிழிலே கடிதம் எழுதுகின்றவர்களுக்கும் தமிழிலே விண்ணப்பங்கள் அனுப்புகின்றவர்களுக்கும் என்ன முறையில் மறுமொழி அனுப்ப வேண்டுமென்று அமைச்சரவை இன்று ஏதும் முடிவு செய்திருக்கின்றதா இன்னும் முடிவு செய்ய எண்ணவில்லையா அல்லது முடிவு செய்யும் எண்ணமே அரசாங்கத்துக்கு இல்லையா என்பதையும் அறிய விரும்புகிறேன்".

இதற்கு திரு. இலங்கரத்தின கொடுத்த மறுமொழி:

"With regard to the question of the language used in official correspondence, they policy of the Government is to reply letters written in Tamil, in Sinhala with a Tamil translation. There is no change in that policy."

இதன் மொழி பெயர்ப்பு "அரசாங்க கடிதங்களில் பயன்படுத்தப்படும் மொழி பற்றிய அரசாங்கக் கொள்கை தமிழ்க் கடிதங்களுக்குச் சிங்களத்தில் மறுமொழி அனுப்பும்போது தமிழ் மொழிபெயர்ப்பு அனுப்புவதேயாகும். இக் கொள்கையில் மாற்றமில்லை".

இலங்கரத்தினவின் இந்த மொழி தினபதியின் திரிப்புச் செய்தி தமிழ்க் கடிதங்களுக்குத் தமிழில் பதில் என்னுஞ் செய்தி பொய்யானது; விசமத்தனமானது தமிழ் மக்களை வேண்டுமென்றே ஏமாற்றுதற்காக வெளியிடப்பட்டது என்பதை நன்கு காட்டுகிறது.

ஆனாலும் தினபதி ஆசிரியரின் போக்கிரித்தனம் மீண்டும் ஏமாற்ற முயன்றுளது இந்த மறுமொழியை 20-10-72 ஆம் தினபதி இதழில் முன்பக்கத்தில் வெளியிட்ட தினபதி 'விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்று கூறும் கயவனைப்போல் அரசாங்கத்துக்குத் தமிழில் எழுதினால் தமிழில் பதில் எனும் பொய்த் தலைப்பைக் கொடுத்துப் பொய்யையும் புரட்டையும் எழுதியுள்ளது.

தமிழில் பதில் அனுப்புவதற்கும் சிங்களத்தில் பதில் அனுப்புவதற்கும் உள்ள வேறுபாடு தெரியாத அளவுக்குத் தினபதி ஆசிரியருக்கு பைத்தியம் முற்றிவிட்டதென்று கூற முடியாது. போக்கிரித்தனம், கயமைக்குணம், துரோகச் சிந்தனை முதலியன அவரை ஆட்கொண்டு விட்டன.

அமைச்சர் இலங்கரத்தினவின் மறுமொழியை ஏறக்குறைய எல்லாப் பத்திரிகைகளும் வெளியிட்டன. வேறெந்தப் பத்திரிகையும் தினபதிபோல் பொய்யையும் புரட்டையும் எழுதவில்லை அவற்றின் தலையங்கங்களைப் பாருங்கள்.

"தமிழிலே பதில்" செய்தியில் உண்மையில்லையாம்.

— ஈழநாடு 21.10.72

"தமிழ் கடிதங்களுக்குச் சிங்களத்தில் பதில்"

—வீரகேசரி 20.10.72

"அரசினின் கொள்கையில் மாற்றமில்லை"

—தினகரன் 20.10 72

இத்தலையங்கங்களுடன் தினபதியின் பொய்த் தலையங்கத்தை ஒப்பிட்டுப்பாருங்கள்.

"அரசாங்கத்துக்குத் தமிழில் எழுதினால் தமிழில் பதில்" "தினபதி செய்தி சபையில் ஊர்ஜிதம்"

உண்மை என்ன?

"தினபதியின் செய்தி முழுப் பொய் என்று அரசுப் பேரவையில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது"

இந்தத் தினபதிக்குத் தொடர்ந்து தீமூட்டுவது போதாது; இனித் தமிழர் பகிஷ்கரிக்க வேண்டும். தமிழ்ப் பகுதிகளிலிருந்து மாவைத் தமிழர் வீடுகளிலிருந்து இதனை ஒழித்துக்கட்ட ஓரியக்கத்தைத் தொடங்க வேண்டும்.

## உணர்ந்தெழு தமிழா!

மலை முடிதன்னில் கொடிதனை ஏற்றிய
கொற்றவன் செம்மலன்றோ! நீ
நிலைதனை இழந்து நெழிந்திடும்புழுவாய்
துவண்டு கிடப்பதும் ஏன்?

கலை தனை வடித்துக் காவியம் பாடிய
கன்னித் தமிழ்ப் புலவன்—உன்
நிலை குலைந்து விலை பறிபோவதை
கண்டு பொறுப்பானோ?

மலையே வரினும் நிலைதளராத உன்
தலைமகன் வீரமெங்கே?—தாய்
முலைதனை ஈந்து நிலைபெறச் செய்திட்ட
விலையிலா வீரம் எங்கே?

மொழியில்லை! வழியில்லை! நாடில்லை! இங்கே
இனி ஏது வேண்டும் சொல்தமிழா!—உன்னை
பழித்தவன் பார்த்திடப் பாரினில் ஏற்றிவை
சங்கத் தமிழ்க் கொடியை!

மாடத்தில் மஞ்சம் மஞ்சத்தில் சங்கம்
கூடத்தில் ஏற்றி கொலுவுற்றனை—என்று
பாடிடப் பெற்றவன் நீயடா! நிலை
தாழ்ந்து கிடப்பதும் ஏனடா?

ஆடுதல், பாடுதல், கூடுதல் வீரம்
அத்தனையும் உந்தன் காதலடா—உன்னை
சாடுதல் கண்டும் பேடியைப் போல்கண்
மூடுதல் செய்வதும் எதுக்கடா?

—வளலாயூர் வளவைத்தம்பி செ.

## வவுனியாத் தொகுதியில் பெருந்தொகையாக குரக்கன் சாகுபடி!

### திரு. செல்லத்தம்புவின் வேண்டுகோளுக்கு மக்கள் செவிசாய்ப்பு!

வவுனியாத் தொகுதியில் உள்ளூர் உற்பத்தி விளைபொருட்களான குரக்கன்—தினை—முதலியவற்றை பெருமளவில் சாகுபடி செய்ய வேண்டும் என வவுனியாத் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. செல்லத்தம்பு அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தார் அல்லவா; அதன் படி வவுனியாத் தொகுதியில் பலா உள்ளூர் உற்பத்திப்பொருட்களை சாகுபடி செய்யத் தொடங்கியுள்ளனர். விசேடமாக, வவுனியா வடக்கு காரியாதிகாரி பிரிவான நெடுங்கேணிப் பகுதியில் முன்னைய வருடங்களை விடப் பெரும் அளவு கூடுதலாக இவ் வருடம் குரக்கன் சாகுபடி செய்யப்படுகிறது.

### சிகரட் விற்பனை இல்லை

தமிழர் கூட்டணியின் வேண்டுகோள்களில் ஒன்றான சிகரட் புகைக்க வேண்டாம் என்ற வேண்டு[illegible] புளியங்குளம் ஆகிய இடங்களில் உள்ள கடைகளில் முற்றுகவே சிகரட் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது. சிகரட் ஏஜெண்ட் வான் விற்பனைக்குச் செல்லும் போது சிகரட் வாங்காமலே திருப்பி அனுப்பிவிட்டார்கள் பரங்குளத்திலும் சில கடைகளில் சிகரட் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது. வவுனியாத் தொகுதியில் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களும் — பெரியோர்களும்—சிகரட் புகைத்தல் — சாராயம் அருந்துதல் முதலியவற்றைக் கைவிட்டனர். பல இளைஞர்களும் பெண்களும் கூட சீனி பாவித்து தேநீர் அருந்துவதை நிறுத்தியுள்ளனர். எங்கள் எம். பி சுருட்டுப் புகைத்தலையே நிறுத்தி விட்டாரென்றால், ஏன் எம்மால் சீனி பாவிக்கும் பழக்கத்தை நிறுத்த முடியாது என ஒரு வயது முதிர்ந்த பெண் கேட்டார்.

தனது வாடிக்கைப் பழக்கமான சுருட்டுப் புகைத்தலையே 2ம் திகதியுடன் திரு. செல்லத்தம்பு நிறுத்தி விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியாத் தொகுதியில் மீண்டும் யாழ் அகற்றிச் சங்கம்

### ஆளுங்கட்சி ஆதரவாளர்களின் சதிச் செயல்

வவுனியாத் தொகுதியில் யாழ் அகற்றிச் சங்கம் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது. இதற்கான திட்டமிட்ட வேலைகளை ஆளுங்கட்சியில் அடிவருடியும், கடந்த வருடம் துடாவைக்கு வவுனியாத் தொகுதியில் ஆலவட்டம் போட்டவருமான ஒரு ஆசிரியர் செய்துவருகின்றார் எனத் தெரிய வருகின்றது. இவ்வாசிரியர் நெடுங்கேணிப் பகுதியில் கடமை புரிகின்றார். கடந்த தேர்தல் காலங்களில், இவரின் மகன் தேர்தல் பிரசார மேடையிலேயே யாழ்மக்களை 'வைக்கல்கட்டவந்தவர்கள்' என்றும், 'இங்கு பசளை அரிசி சோறு தின்று கொழுப்பு ஏறியவர்கள்' என்றும் பேசியவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு பிரதி அமைச்சருக்கு வால் பிடித்த இவர், இப்போ (சூ) 'சூரிய'விற்கு பந்தம் பிடிக்க அலைந்து திரிகிறார். தான் துடாவையின் கையாள் என பலரிடமும் சொல்லித் திரியும் இவர் வவுனியாப் பகுதியில் கல்வி அதிகாரிகளையும் தன் வசப்படுத்தி இவர் கடமைபுரியும் பாடசாலையில் கடமைபுரிந்தயாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஆசிரியைகளை இடமாற்றம் செய்வித்து வருகிறாராம். இப்படியாக இவரின் தலைமையில் வவுனியாத் தொகுதியில் யாழ் அகற்றி வேலைகள் நடைபெற்று வருவதை குமாரசூரியரோ—பத்மநாதனே அறிவார்களா எனப் பொது மக்கள் கேட்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி. மு. க. பிளவுபடுவது தமிழகத்திற்கே கேடு!

## எம். ஜி.. ஆர். கழகப் பிரச்சினை தீருவதற்கு வழி என்ன?

## ஆனந்தவிகடன் தலையங்கம்!

பேரறிஞர் அண்ணு அவர்களாலும் பல்லாயிரக்கணக்கான தொண்டர்களாலும் உருவாக்கப்பட்ட தமிழினத்தின் தன்மான இயக்கமும், தமிழ்நாட்டின் இன்றைய ஆளுங்கட்சியும், ஆறு கோடி திராவிட மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் என்று கருதப்பட்டதுமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஏற்பட்ட பிளவினைக் கண்டு உலகெங்கும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற தமிழர்கள் தாளாத வேதனையுடன் தாயிழந்த சேய்போல இன்று பரிதவித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் நடைபெறும் சம்பவங்களைக் கேட்டு ஈழத்தமிழர்களின் இதயமெல்லாம் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றன. தமிழினத்துக்கு ஒளிகொடுக்க அண்ணு ஏற்றிவைத்த தி. மு. க. ஆட்சி எனும் தீபம், தமிழகத்தில் வீசும் அரசியல் புயல்காரணமாக அணைந்துவிடுமோ என்ற அச்சம் அனைவரையும் கப்பி இருக்கிறது.

தி. மு. கழகத்தில் ஏற்பட்ட தகராறு பற்றி சென்னையிலிருந்து வெளிவரும் ஆனந்த விகடன் 22.10.72 இதழ் ஓர் ஆணித்தரமான தலையங்கத்தை எழுதியிருக்கிறது. அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களையே மிகப் பெரும்பாலான ஈழத்தமிழர்களும் கொண்டிருப்பதால், அத்தலையங்கத்தை அப்படியே இங்கு தருகிறோம். —ஆர்.

திடீரென்று தமிழகத்தில் ஓர் அரசியல் புயல் வீசத் தொடங்கியிருக்கிறது. சில நாட்களாகவே இதற்கான அறிகுறிகள் தோன்றிவந்தாலும், கவலை தரும் வடிவம் எடுத்து, இத்தனை விரைவாக அது ஒரு சூறாவளியாக மாறும் என்று ஒருவரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

தமிழகத்தின் வலிமை பொருந்திய ஒரே கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரு தலைவர்களிடையே கருத்து வேற்றுமை தோன்றி, அது வெளிப்படையாகப் பரவி அமைதியான அரசியல் சூழ் நிலையைக் குலைத்து, பயங்கர விளைவுகளுக்கு வித்திட்டிருக்கிறது.



இப்படியொரு நிலைமை உருவாகியிருப்பதைக் கண்டு யாரும் கவலைகொள்ளாமல் இருக்க முடியாது. உட்பூசலின் காரணமாக அக்கட்சி பலவீனமடைந்து பாதிக்கப்படுமானுல் அது கழகத்தின் நட்டம் மட்டுமல்ல—தமிழகத்தின் பெரும் நட்டமாகவும் முடிந்துவிடும்.

தி. மு. க. பதவிக்கு வந்த பிறகு, அமைச்சர்களும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கழக முன்னணியினரும் அதிகாரம் தந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு நிறைய சொத்துக்கள் சேர்த்து விட்டனர் என்று எதிர்க்கட்சியினர் மக்களிடையே ஓயாமல் குற்றம் சாட்டி வருகின்றனர். இது கழகத்திற்கு பெரும் களங்கத்தை ஏற்படுத்தித் தந்துள்ளது. இந்த அவப் பெயரை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும், கழகத்தினரின் சொத்துக் கணக்குகளைப்பற்றிய சந்தேகங்களை அகற்ற வேண்டுமென்றும், குற்றம்புரிந்தவர்களை தண்டித்து, கழகத்தின் நற்பெயரைக் காப்பாற்ற வேண்டும் என்றும் பொருளாளர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கருத்துத் தெரிவித்தார்.

செயற்குழுவிலோ, பொதுக் குழுவிலோ தம் கருத்தைத்தெரிவிக்காமல் பொது மேடைகளில் இவ்வாறு பேசியது கழகத்திற்கு விரோதமான செயல் என்று கூறி, கழக மேலிடம் எம். ஜி. ஆரைக் கழகத்திலிருந்து தற்காலிகமாக நீக்கியது. இதைத்தொடர்ந்து ஒற்றுமையாயிருந்த கழகத்தில் இருபிரிவுகள் தோன்றி வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்றன.

தி. மு. க. வில் தற்போது நடைபெறுவது கொள்கைப் போராட்டமோ, தத்துவப் பூசலோ அல்ல; கழகத்தை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும் என்பதில் தான் இரு சாரரும் தீவிரமாக இருக்கிறார்கள். ஆனுல் எந்த முறையில் அதைக் காப்பாற்றுவது என்பதில் தான் கருத்து வேற்றுமை இருந்து வருகிறது.

'நம் சொத்துக்களைப் பகிரங்கப்படுத்தி மக்களின் சந்தேகங்களைப் போக்க வேண்டும். அப்போதுதான் கட்சிபிழைக்கும்' என்கிறார் கழகப் பொருளாளர் எம். ஜி. ஆர்.

'இதைப் பற்றி மக்களிடையே பேசக்கூடாது. நமக்குள்ளேயே பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டும். எத்தனை பெரிய தலைவராக இருந்தாலும் கட்சிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுத்தான் செயலாற்றவேண்டும். கட்சிக்கட்டுப்பாடு குலைந்தால் கழகத்தைக் காப்பாற்ற முடியாது.' என்கிறார் கழகத் தலைவர் கருணாநிதி.

கருணாநிதியும், எம். ஜி. ஆரும் தி. மு. க. வின் இரு கண்கள், அண்ணுவின் நம்பிக்கையைப் பெற்றிருந்த அருமைத் தம்பிகள். தோளோடு தோள் நின்று கழகத்தை அரும் பாடுபட்டு வளர்த்தவர்கள். தங்களது சுய கௌரவத்திற்காக கழகம் பிளவுபட ஒரு போதும் அவர்கள் காரணமாக இருக்க விரும்பமாட்டார்கள்.

இருவரும் நடந்தவற்றை மறந்து, பிறரின் உதவியின்றி நேருக்கு நேர் சந்தித்து, எதிரெதிரில் அமர்ந்து மனம் விட்டுப் பேசினுல் இருவருக்குமிடையே சமரசப்பாலம் அமைவது எளிதாகிவிடும்.

இந்தப் புயலைக் கிளப்பியவர்களால்தான் அதை அடக்கவும் முடியும். இவர்கள் இருவரும் சேர்ந்தால்தான் கழகத்தின் ஒற்றுமை வலிவும் பொலிவும் பெறும்.

தங்களது பெருவாரியான ஆதரவுடன் பதவிக்கு வந்துள்ள தி. மு. க. விடமிருந்து தமிழ் மக்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள். அது ஒற்றுமையுடனும் திறமையுடனும் செயல்பட்டு, சமுதாயத்திற்கு பல நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

மக்களது நம்பிக்கையை தி. மு. க. தலைவர்கள் குலைத்துவிட மாட்டார்கள் என்று விகடன் உளமார நம்புகிறான்".

## நிகழ்ச்சி நிரல் ஆங்கிலத்தில் கர்னுடக இசைக்குக் கழுத்தறுப்பு!

### வாணி விழாவா? காணிவேல் களியாட்டமா?

நிகழ்ச்சி நிரல் எமக்கு வழங்கப்பட்ட போது, திகைப்படைந்தோம். இது ஆங்கிலத்தில் மட்டுமே அச்சிடப்பட்டிருந்ததற்கு எம்மால் இதுவரை காரணம் கண்டுகொள்ளவே முடியவில்லை. அழைக்கப்பட்டோரில் நூற்றிற்கு 95 விகிதத்தினர் தமிழராக இருந்தனர். ஏனையோர் சிங்கள மக்கள். எனவே நிச்சயமாக, கட்டாயமாக நிகழ்ச்சி நிரல் தமிழில் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். வேறு மொழியிலும் எழுதப்பட்டிருக்க வேண்டுமாயின், அது சிங்கள மொழியேயன்றி ஆங்கிலமல்ல. இவ்விடத்தில் நிகழ்ச்சி அறிவிப்புகள் தமிழில் மட்டும் கொடுக்கப்பட்ட பெருமைதரக்கூடிய விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறோம். அறிவிப்புகள் தனித்தமிழில் இருந்த போது நிகழ்ச்சி நிரல் தனி ஆங்கிலத்திற் கொடுக்கப்பட்டது. தகுந்த காரணமின்றிச் செய்யப்பட்டதாகவே எமக்குத் தோன்றுகின்றது.

கலைஞர்கள் கலைத்தேவியின் அருள்நாடி நிற்கும் இவ்விழாவிற்கு வானெலியில் கர்நாடக இசை வழங்கும் கலைஞர்கள் அழைக்கப்படாதிருந்தது ஏன்? இசை உலக அன்பர்களை அங்கு காணவே இல்லையே? கூட்டுத்தாபனத்திலும் பாகுபாடா? அல்லது இம்மாதிரியான வைபவங்களுக்கு, அவர் வருகை தந்தாலும் தராவிட்டாலும் சரி, ரசித்தாலும் ரசிக்காவிட்டாலும் சரி, "பெரிய மனிதர்கள்" தான் அழைக்கப்படவேண்டும் என்பது தான் கூட்டுத்தாபனத்தின் கொள்கையா?

எக்கோணத்திலிருந்து நோக்கினுலும் இந்நிகழ்ச்சி 'வாணி விழா'வில் பொருத்தமற்றுத் திணிக்கப்பட்டதாக தோன்றுகின்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அண்மையில் நடத்திய வாணி விழாவைப்பற்றி வானெலித் தமிழ் ஒலிபரப்பு ரசிகர் மன்றம் ஓர் விமர்சனக் கட்டுரையை சுதந்திரனுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. அந்தக் கட்டுரையிலிருந்து சில பகுதிகளை இங்கே தருகிறோம்.

—ஆர்

நிகழ்ச்சி ஆரம்பத்தின் 'மெல்லிசை தான் தற்போது மக்களைப் பெரிதும் கவர்ந்து வருகிறது' என்ற பொருள்பட அறிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி இவ்விழாவில் புகுத்தப்பட்டதற்கு இது ஓர் காரணமாக இருக்கலாம். ஆனுல் இது ஓர் தகுந்த காரணமாக எமக்குத் தெரியவில்லை. மக்களைக் கவரும் நிகழ்ச்சிகள் பல உண்டு. உதாரணமாக 'கபரே' நடனங்கள், 'டுவிஸ்ட்' நடனங்கள், 'துகிலுரிப்பு' நடனங்கள், ஆபாசம் மலிந்த இசை, "ரொக் அன்ட் ரோல்" இசை, "பீடில்ஸ்" இசை, "பாப்" இசை, இப்படியாகப் பல—இவற்றையெல்லாம் தமிழர் விழாக்களில் புகுத்தலாமா? அப்படியாயின் "வாணி விழா" வில் பரதத்திற்குப் பதில் 'டுவிஸ்ட்' நடனத்தையும், கர்னுடக இசைக் கச்சேரிக்குப்பதில் "பொப்" இசையையும் திணித்து, இவற்றை விளம்பரப்படுத்தியிருந்தால், அனுமதிக் கட்டணம் அற [illegible] சைவ ஆலயங்களில் 'பாப்' இசை ஒலிக்கச் செய்தால் அது இந்து மக்களின் மனதைப் புண்படுத்தமாட்டாதா?

எமது இனம் இலக்கியம் கலை கலாச்சாரம் அற்ற ஓர் பாலைவனமல்ல. உலகமே மெச்சும் மேலான இலக்கியமும், அருமையான கலைகளும், பெருமைதரும் கலாச்சாரமும் பண்பாடுமிக்க ஓர் பூஞ்சோலையே! எனவே இரவல் வாங்கவோ, பிற இனத்தவர்களது (குறிப்பாக மேலை நாட்டவர்களது) கலைகளைப் பின்பற்றவோ வேண்டிய அவசியம் எமக்கில்லை.

கர்னுடக இசையை இலகுவில் புரிந்து ரசிக்க முடியாது. அதற்கு உயர்ந்த ரசனை வேண்டும். மெல்லிசையே மக்களை எளிதில் கவரும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டும். இதே காரணத்திற்காகவே இலங்கை ஒலிபரப்புக கூட்டுத்தாபனம் போன்றவை கர்னுடக இசையை பேணிக்காத்து வளர்க்க முன்வர வேண்டும் என்று நாம் துடிக்கின்றோம்.

இனி, 'வாணி விழா'வில் நடந்த மெல்லிசை நிகழ்ச்சியைப்பற்றிய ஒரு சில அவதானிப்புகளை எடுத்துரைக்க விரும்புகின்றோம்:—

1. நாம் முன்பு கூறியது போல் கர்னுடக இசைக்கான நேரம் குறைக்கப்பட்டு, மெல்லிசைக்கு அதிக நேரம் கொடுக்கப்பட்டிருந்தது.

2. இந்நிகழ்ச்சியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சிங்கள வாத்தியக் குழுவினர் பங்குபற்றினர் என அறிவிக்கப்பட்டாலும், ஏறத்தாள 30 கலைஞர் பங்கு பற்றியதில் மூன்றே மூன்று தமிழ்க் கலைஞர் மட்டுமே பங்காற்றினர். இவர்கள்கூட கிலுகிலுப்பை போன்ற முக்கியத்துவம் அற்ற வாத்தியங்களையே அடிக்கடி கையாண்டு அரைகுறையாகப் பங்கு பற்றினர். மொத்தத்தில் இந்நிகழ்ச்சியில் எமது வாத்தியக் கலைஞருக்குப் பங்கில்லை.

3. பரம்பரை பரம்பரையாக தமிழர், குறிப்பாக சைவசமயத்தவர்கள் பண்டைய பண்பாடு கெடாமல் நடத்தி வந்துள்ள "வாணி விழா" வில் சம்பிரதாயத்திற்கு முரணுக இந்நிகழ்ச்சி திணிக்கப்பட்டது.

4. 'சரஸ்வதி' தேவி கொலுவீற்றிருக்கும் புனிதமான மேடையில் பெரும்பா

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## சமரச முயற்சிகள்

சிங்களப் பிரமுகர்கள், கனவான்களின் குழுவொன்று அண்மையில் யாழ்ப்பாணம் சென்று திரும்பியிருக்கிறது. தமிழர்களின் பிரச்சினைகளையும் உள்ளக்குமுறல்களையும் புரிந்துகொள்ளவும் தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக் கோரிக்கையைப் பற்றி தெரிந்துகொள்ளவும் இக் குழுவினர் யாழ்ப்பாணம் சென்றுதிரும்பியுள்ளனர்.

இந் நாட்டுத் தமிழ் தேசிய இனத்தின் உணர்ச்சிகளை -நியாயமான கோரிக்கைகளை அதிகாரத்திலிருக்கும் சிங்கள ஆட்சியாளர்கள் தமக்கேயுரிய ஆணவத்தால் — அதிகாரத் திமிரால் — ஏகாதிபத்திய முனைப்பால்—ஏறெடுத்துப்பார்க்கவும் மறுத்து அலட்சியம் காட்டிய போதிலும் சிங்கள மக்களிடையேயுள்ள நியாய உள்ளம் படைத்த ஒரு சிலராவது தமிழ் மக்களின் பிரச்சினைகளை அறிந்துகொள்வதில் ஆர்வத்துடன் முன்வந்தது நிச்சயம் பாராட்டப்பட வேண்டியதே.

நல்லெண்ணம் படைத்த குறிப்பிட்ட சில சிங்களப் பிரமுகர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையில் காட்டுகின்ற ஆர்வத்தை நாம் வரவேற்கின்ற அதே வேளையில் தமிழ் பேசும் மக்களின் மன உளைச்சலையும் இங்கு சுட்டிக்காட்டுவது நம்முடைய கடமையாகும்.

கடந்த கால்நூற்றுண்டு அரசியல் வரலாற்றில் இந்நாட்டுத்தமிழ்பேசும் மக்கள் சிங்கள ஆட்சியாளரால் ஒவ்வொரு முனையிலும் ஏமாற்றப்பட்டு இன்று விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். சூடுகண்ட பூனையாக்கப்பட்டு விட்டார்கள்.

நல்லெண்ணம், பேச்சுவார்த்தை, சமரசம், ஒப்பந்தம், உடன்படிக்கை போன்ற வார்த்தைகள் எல்லாம் தமிழனுக்கு இன்று எட்டிக்காயாக கசக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழினத்தை ஏமாற்றவே சிங்களத் தலைவர்கள் மேற்கண்ட வார்த்தைகளை பயன்படுத்துகிறார்களே தவிர உரிமைகளை வழங்கும் உண்மையான நல்லெண்ணத்துடனல்ல என்பதே இன்றைத் தமிழனின் இதயத்தில் பதிந்து விட்ட கருத்தாகும்.

சிங்கள மக்களை நம்பி நம்பி ஏமாந்து கொண்டிருப்பதைவிட தமது சுயாதீனத்தை நிலைநாட்டி சுதந்திர மக்களாக இந்நாட்டில் வாழ்வதற்கு போராடுவதே முற்று முடிவான ஒரே வழி என்னும் நிலைக்கு தமிழமக்கள் இன்று தள்ளப்பட்டுவிட்டார்கள்.

தமிழ் மக்களின் மனோநிலை இந்த நிலையை அடைவதற்கு முழுக்க முழுக்கப் பொறுப்பு ஏற்கவேண்டியவர்கள் சிங்கள மக்களும் சிங்களத் தலைவர்களுமே. சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் காலத்திலிருந்தே தமிழர்கள தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள்.

இந்நாட்டின் சுதந்திரத்துக்கு போராடிய சேர். பொன். அருணாசலம் தமது கடைசிக் காலத்தில் சிங்கள மக்களால் தமிழர்கள் ஏமாற்றப்படுவது கண்டு சிங்களத் தலைவர்களில் நம்பிக்கை இழந்து "தமிழ் லீக்" என்னும் தனியொரு கட்சியமைத்து தமிழர் உரிமைகளுக்காக வாதாடினார்.

முன்னாள் வவுனியா எம். பி. திரு. சி. சுந்தரலிங்கம் சிங்களத் தலைவர்களின் ஒத்துழைப்பு மாயாஜாலத்திற்கு பலியாகி இறுதியில் ஏமாற்றப்பட்டதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

காலஞ்சென்ற திரு. சு. நடேசபிள்ளை, திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் போன்ற பல தமிழ்த் தலைவர்கள் சிங்கள அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தும் இறுதியில் அடைந்தது ஏமாற்றமே.

இதே போலவே 1957ம் ஆண்டு உருவாக்கப்பட்ட பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தமும் 1965ம் ஆண்டு உருவான டட்லி — செல்வா உடன்படிக்கையும் சிங்கள மக்களின் எதிர்ப்பால் கிழித்தெறியப்பட்டுவிட்டன.

மேற்கண்ட அரசியல் வரலாற்று ஆதாரங்களின் பின்னணியே சமரசம் பேசிவரும் சிங்களத் தலைவர்களைப் பற்றி சந்தேகக் கண்கொண்டு பார்க்கும்படி தமிழ் மக்களைத் தூண்டுகிறது.

உண்மையான — அந்தரங்க சுத்தியான — நல்லெண்ணத்தையும் சமரச முயற்சியையும் வரவேற்பதற்கு தமிழ் மக்கள் என்றும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அந்தரங்க சுத்தியுள்ள தலைவர்களைக் கண்டுபிடிப்பது தான் சிங்கள சமுதாயத்தில் முடியாத காரியமாக இருக்கிறதே!

இதே நேரத்தில் தமிழர் கூட்டணியினருக்கும் ஒன்று கூறிவைக்க விரும்புகிறோம். காந்தீயவழியில் போராடும் தமிழர் கூட்டணியினர் எந்தச் சமரச முயற்சிக்கும் திறந்த மனதுடன் செல்வதில் தவறொன்றும் இல்லைத்தான். ஆனால் தமிழ் மக்கள் உள்ளங்களில் இன்று பொங்கிவழியும் விடுதலை உணர்ச்சிக்கு — தமிழ் ஈழம் அமைத்து தமிழினத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டியே தீரவேண்டும் என்னும் வாலிபர்களின் இலட்சிய வெறிக்கு — எந்தச் சமரச முயற்சியும் தடைக்கல்லாக முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது. என்பதை மட்டும் கூறிவைக்க விரும்புகிறோம். சமரச முயற்சிகள் எதுவும் விடுதலை உணர்ச்சியை பலவீனப்படுத்தக் கூடாது என்பதுதான் நமது வாதமாகும்.

# தமிழ் பாடசாலைகள் புறக்கணிக்கப்படுகின்றனவே!

## கல்வி அமைச்சரிடம் காவலூர் பா.உ. கேள்வி!

நேர்முகப் பரீட்சை முடிந்தும் ஆங்கில உதவி ஆசிரியர்களைத் தமிழ் பாடசாலைகளுக்கு இன்னும் ஏன் நியமிக்கப்படவில்லை என்று தேசிய அரசுப் பேரவையில் கா. பொ. இரத்தினம் பா. உ. கல்வியமைச்சரைக் கேட்டார். அன்று கல்வியமைச்சரும் பிரதி கல்வி அமைச்சரும் பேரவைக்குவராமையால் அமைச்சர் ரி. பி. இலங்கரத்தின இதனைக் கல்வி அமைச்சரின் கவனத்துக்குச் சமர்ப்பிப்பதாகக் கூறினார்.

திரு. இரத்தினம் கேட்டதாவது:

முதலாவது, நான் கல்வி அமைச்சரைக் கேட்கும் வினா. ஆங்கில உதவி ஆசிரியர்களை நியமிப்பதற்காகச் சில மாதங்களுக்கு முன்னர் கல்வி அமைச்சினால் நேர்முகப் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டது. சிங்களப்பாடசாலைகளுக்கும், முஸ்லீம் பாடசாலைகளுக்கும் ஆங்கில உதவி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்கள். சில மாவட்டங்களிலே, சில தமிழ் பாடசாலைகளில் குறைந்த எண்ணிக்கையான ஆங்கில உதவி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாண மாவட்டத்திலோ திருகோணமலை, மூதூர் போன்ற இடங்களிலோ உள்ள தமிழ்பாடசாலைகளிலே ஆங்கில உதவி ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களிலே எத்தனை பேரை எப்பொழுது கல்வி அமைச்சு தமிழ் பாடசாலைகளிலே ஆங்கில உதவி ஆசிரியர்களாக நியமித்திருக்கிறதென்பதை அறிய விரும்புகிறோம். நேர்முகப்பரீட்சை முடிந்தும் தமிழ் பாடசாலைகளுக்கு ஆங்கில உதவி ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலிருப்பது வேண்டுமென்றே தமிழ் பாடசாலைகள் புறக்கணிக்கப்படுகின்றனவா என்ற சந்தேகத்தை மக்களிடையிலே எழுப்பியிருக்கின்றபடியால், எப்பொழுது எத்தனைபேர் ஆங்கில உதவியாசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் என்பதை அறிய விரும்புகிறோம்.

# மீண்டும் துள்ளுகிறார் மஜீத்!

## முழு மந்திரிப்பதவிக்கா இந்த வேஷம்?

கல்வி மந்திரியுடன் யாழ்ப்பாணம் வந்த மஜீத் தமிழர் முஸ்லிம் பிரச்சினைகளைக் கிளறினார். கிழக்கு மாகாணத்தில் ஆறு ஓடும் என்று குரல் எழுப்பினார். குட்டிப் பொதுத்தேர்தலில் கூட்டணி பற்றிக் கண்ட படி சன்னி கண்டவன் போல் அலட்டினார். மக்கள் அவருக்குச் சாட்டை அடி கொடுத்தனர். இப்பொழுது முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் கிராம சேவகர், விவாகப்பதிவுகாரர், என எல்லா உத்தியோகஸ்தர்களும் முஸ்லிம்களாக இருக்க வேண்டும் என்று ஒரு வேண்டுகோளை அரசுக்கு விட்டிருக்கிறார். நாட்டு நடப்பைத் தெரியாத குழந்தைப் பிள்ளையாக மஜீத் துள்ளிக் குதிப்பது ஏனோ தெரியவில்லை. சோசலிசத்தில் இன வாதம், பிரதேச வாதம், மொழி வாதம் எவற்றுக்கும் கிஞ்சித்தும் இடமில்லை என்று பேசுபவர்களும் அவர்கள் தான். பின்னர் குறுகிய எல்லைக்குள் நின்று கொக்கரிப்பவர்களும் அவர்கள் தான். முஸ்லிம்களுக்காக பகல் வேஷம் போட்டு முன்னுக்கு வந்து முழு மந்திரிப்பதவி பெறத்தான் இத்தனை துள்ளிக் குதிப்பும் என்று. இன்று மக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

அவரை ஒரு சின்னக் கேள்வி கேட்கிறேன்? பதில் தருவாரா? இன்று முழுக்க முழுக்க தமிழ் பிள்ளைகள கல்வி கற்கும் பாடசாலைகளில் முஸ்லிம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருவதை அவர் அறிவாரா? ஆம் என்றால் அவர்கள் அனைவரையும் திருப்பி அழைத்து முஸ்லிம் பாடசாலைகளிலேயே நியமிப்பாரா? கலையகம் முழுவதும் ஒவ்வொரு பாடசாலையிலும் இன்று முஸ்லிம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். இதனை இன்று எவரும் எதிர்க்கவில்லை. ஆனால் மஜீத், முஸ்லிம் தனித்துவம் பேணப்பட வேண்டுமென்று கச்சை கட்டுறவ இவர்கள் அனைவரும் திருப்பி அழைக்கப்படவேண்டுமல்லவா?

மூகலை தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். அங்கு எல்லா வகுப்புகளிலும் பார்த்தாலும் மொத்தம் 50 மாணவர்களே முஸ்லிம் மாணவர்கள். அப்படியான பாடசாலையில் கனிஷ்ட பிரிவுக்கு தலைமை ஆசிரியராக ஒரு முஸ்லீம் ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார். அதே நேரத்தில் அங்கு முதலாம் தர தலைமை ஆசிரியர் ஒருவர் சில மாதங்களுக்குமுன் நியமிக்கப்பட்டும் அவருக்கு அந்தப் பதவி கொடுக்கப்படவில்லை. அவர் ஒதுங்கி வாழ்கிறார். தமிழ் பிள்ளைகள் பெரும்பான்மையாக இருக்கும் பாடசாலைகளில் தலைமையாசிரியர் தமிழராகவே இருக்கவேண்டும் என்பது கல்வி இலாகா ஒப்புக்கொண்ட, நடைமுறையில் இருக்கும் கொள்கை. அப்படியிருந்தும் இங்கு முஸ்லிம் ஆசிரியர் தலைமையாசிரியராக இருக்கின்றார். மஜீத்தின் மந்திரவித்தையின்படி இம்முஸ்லீம் ஆசிரியர் அங்கு கடமையாற்ற முடியாதல்லவா? அங்குள்ள பெற்றோர் இதுபற்றிக் கவலைப்படவில்லை. இது அவர்கள் பரந்த நோக்கத்தையே காட்டுகின்றது. அவர்கள் எதிர்ப்புள்ளதுவும் இன்றுவரை தெரிவிக்க முன்வரவில்லை. எனவே குட்டையைக் குழப்பாமல் வாலைச் சுருட்டிக் கொண்டு மஜீத் இருப்பாரா?

—அப்பலோ

# ஈழத்தமிழக முதல்வருக்கு மட்டுநகரில் மாபெரும் வரவேற்பு!

## நவம்பர் 11, 12, 13ந் தேதிகளில் கிழக்கிலங்கை முழுவதும் விழா எடுக்கிறது!

16-10-72 திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டத் தமிழர் கூட்டணித் தலைவரும் முன்னாள் செனட்டருமான திரு. மு. மாணிக்கம் அவர்கள் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்ற மாவட்டச் செயற்குழுக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன் கீழ்வரும் உறுப்பினர்களைக் கொண்ட வரவேற்புக் குழுவொன்றும் தமிழ் ஈழ முதல்வர் தந்தை செல்வாவை வரவேற்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்வதற்கு நியமிக்கப்பட்டது.

தலைவர் திரு. கே. டபிள்யு. வேதநாயகம் பா. உ., உப தலைவர்கள் திரு. செ. இராசதுரை பா. உ., திரு. எஸ். எம். இராசமாணிக்கம், திரு. பொ. மாணிக்கவாசகர், திரு. ஆர். டபிள்யு. வி. அரியநாயகம், திரு. வி. கந்தையா, மற்றும்மாநகரசபை உறுப்பினர்களையும் தமிழர் கூட்டணியின் முக்கிய உறுப்பினர்களையும் கொண்ட வரவேற்புக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

தமிழினத்தின் தன்மானத்தையும் ஒன்றுபட்ட விடுதலை உணர்வையும் உலகிற்கு எடுத்துக் காட்டத் தனது பதவியை உதறித் தள்ளிய தனிப்பெருந் தலைவர். தமிழர் தந்தை செல்வா அவர்களுக்கு நவம்பர் 11, 12, 13 ஆகிய திகதிகளில் மட்டக்களப்பில் மாவட்ட ரீதியில் பிரமாண்டமான பொதுவரவேற்பு ஒன்றைச் செய்வதென மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தந்தை செல்வா அவர்கள் திறந்த மோட்டார்காரில் கல்குடாவிலிருந்து வாழைச்சேனை, வந்தாறுமூலை ஆகிய இடங்களினூடாக மட்டக்

(7-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு கடந்த பதின்மூன்று மாதமாக விடாப்பிடியாக நடத்திய போராட்டத்தை தொடர்ந்து பிறப்புப் பதிவைத் தமிழில் பதிவதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது.

இதுபற்றி திரு. இளைய தம்பி குறிப்பிடுகையில், தம்மைப்போல ஒவ்வொரு தமிழனும் விடாப்பிடியாக தமிழ் உரிமை கோரிப் போராட முன் வந்தால் சிங்கள அர [illegible] என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக்கோரிக்கை

# நீதிநியாயத்தின் பாற்பட்டவை!

## செல்வாவைப் போன்று ஒரு சிறந்த தலைவர் சிங்கள சமுதாயத்திலேயே கிடையாது!

### அவர் காலத்திலேயே தமிழர் உரிமைபெற வேண்டும்!"

தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காக இன்று ஒன்றுபட்டிருப்பது ஒரு பெருந்திருப்பமாகும். இது வரை வடக்கு கிழக்கு மாகாண மக்களே ஒன்று சேர்ந்ததாகக் கருதப்பட்டது. தமிழரசுத் தந்தை செல்வா தமது பாராளுமன்ற பதவியைத் துறந்து யாழ்நகர் வந்தபோது மலையகத் தலைவர்களும் யாழ்ப்பாணம் வந்து யாழ் முற்றவெளியில் திரண்டிருந்த மக்கள் மத்தியில் 'செல்வநாயகம் என்ருல் தமிழ் மக்கள், தமிழ் மக்கள் என்ருல் செல்வநாயகம்' என்று முழக்கமிட்டபின் மலையகம் ஒன்று பட்டதைக் கண்டோம்.

ஈழத்து வாழ் தமிழ் மக்கள் அனைவரும் பிரதேச, கட்சி வேறுபாடின்றி இன்று ஒன்றுபட்டிருப்பது தமிழினத்தின் பேரதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும். இந்த தமிழர் கூட்டு முன்னணியின் தலைவராக இருக்கும் எங்கள் தந்தை செல்வாவுக்கு தமிழ் மக்கள் வாழும் இடங்கள் எங்கும் வரவேற்பும், வாழ்த்தும் எதுவித பேதமுமின்றி அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வேளையில் தமிழர் கூட்டணியின் 6 அம்சக் கோரிக்கைபற்றியும், தமிழர் கூட்டணித் தலைவரின் செல்வாக்குப்பற்றியும் சிங்கள மக்கள் தக்கபடி உணரச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று கூறுவதில் தவறில்லை என்றே நம்புகிறேன். தமிழர் கூட்டணி தமது போராட்டத்தை ஆரம்பிக்கு முன் சிங்களப் பொது மக்கள் மத்தியில் தமிழர் கூட்டணியின் நியாய பூர்வமான கருத்துக்களைப் பரப்ப முன்வரவேண்டும்.

தமிழர் பிரச்சினைகளை, அவற்றின் அவசியத்தைச் சிங்கள மக்கள் அறிவதனுல் மிகப் பெரிய பயன் ஏற்படும் என்று நம்பலாம். ஆகஸ்ட் மாதம் 31ந் திகதி 45 சிங்கள நண்பர்கள்; தலைமையாசிரியர்கள், அதிபர்கள் உட்பட யாழ்நகர் மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு மூன்று விசேட விமானத்தில் வந்ததையும் அதைப்பற்றி இந் நாட்டுப் பத்திரிகைகள் பிரயாதப்படுத்திச் செய்தி வெளியிட்டதையும் வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அவர்களை யாழ்ப்பாணம் அழைத்து முக்கிய பிரமுகர்களைச் சந்திக்கவைக்கவும், தமிழ் மக்களின் அபிலாசைகளையும், விருந்தோம்பும் தன்மைகளையும் பண்பையும் நேரில் கண்டு செல்லும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கும் சந்தர்ப்பம் எனக்குக்கிடைத்ததை என் வாழ்க்கையில் கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பாக எண்ணி மகிழ்கிறேன்.

இவர்கள் வந்து சென்று தங்கள் நண்பர்களுக்கு யாழ்ப்பாண மக்களின் அருமை பெருமைகளைக் கூறி அக மகிழ்ந்ததையும் நான் நேரில் கண்டறிந்தேன். தமிழர் கூட்டணியின் திட்டங்களையும், தந்தை செல்வாவையும் பற்றி, அரசியல்வாதிகளை விட, இலக்கியம், பொதுச் சேவை. இன்னபிறவற்றில் ஈடுபாடுள்ளவர்களை நேரில் சந்தித்து எழுத வேண்டுமென்று தீர்மானித்தேன். இதனுல தமிழ் மக்கள் சிங்களப் பெரியார்களின் கருத்தை அறிந்து தமிழர் கூட்டணியின் சக்திபற்றி மேலும் ஒருபடி உணர முடியுமென்றும் அது மிகவும் பயனுள்ளதாக இருக்குமென்றும் கருதினேன். எனது எண்ணத்தை நிறைவேற்றவும் முடிவுசெய்துவிட்டேன்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போது அப்பெரியார்களை நேரில் சந்தித்து 'அவர்கள் கருத்துக்களை எழுதுவேனென்பதையும் வாசகர்களுக்கு இந்த இடத்தில் குறிப்பிட விரும்புகிறேன். என் சந்திப்புக்கள் நூல் உருவத்தில் உங்கள் முன் காட்சியளிக்கும் காலமும் வெகு தூரத்தில் இல்லை என்பதையும் சொல்லிவைக்க ஆசைப்படுகிறேன்.

ஃ

என் எண்ணம் திண்மை பெற்றது கடந்த 22-10-72 ஞாயிற்றுக்கிழமை முன்னறிவித்தல் எதுவுமின்றி கண்டியிலிருந்து எட்டுமைல் தூரத்திலுள்ள இடமேகம என்ற ஊரில் உள்ள சிங்கள அறிஞர் திரு. எச். எம். சோமரத்தின (சமாதான) நீதிபதி அவர்களைச் சந்தித்தேன்.

இவருக்கு இப்பொழுது வயது 68. 1972ல் கம்பளையில் நடந்த சாகித்திய விழாவுக்குத் தலைமை வகிக்க அழைக்கப்பட்டவர் இவர். இதுவரை 30 நூல்களை சிங்களத்தில் எழுதியுள்ளார். இவர் நூல்கள் பல இன்று பாடசாலைகளில் பாடப்புத்தகங்களாக இருக்கின்றன. சிங்களம், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாளி ஆகியமொழிகளில் பாண்டித்தியமுள்ளவர். சிங்களத்தைத் தவிர மற்றெந்த மொழியையும் பாடசாலைக்குச் சென்று கற்றவரல்லர். தமது சுய முயற்சியினுலேயே கற்ருர்.

---

சந்தித்து எழுதியவர்

**'புத்தொளி'**

---

1945ல் பலப்பிட்டி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபராக இருந்த போது மூன்று மாதங்கள் தமிழ் படித்து ஒரு பிரியாவிடை வைபவத்தில் தமிழிலேயே பிரசங்கம் நிகழ்த்தியுள்ளார். இப்பொழுது தமிழ்பேச முடியாவிட்டாலும் தமிழ் எழுத்துக்களைப்படிக்க முடியும் என்று கூறிய அவர்தான் அன்பளிப்

## சிங்கள அறிஞர் சோமரத்தின கூறுகிருர்!

புச் செய்த எனது நூலின் தலைப்புக்களை ஒவ்வொன்ருக தமிழில் படித்து என்னிடம் விளக்கமும் கேட்டார்.

கலாயோகி ஆனந்த குமாரசுவாமி ஆங்கிலத்தில் எழுதிய medival Singhala Art என்ற நூலை கலாச்சார இலாகாவின் வேண்டுகோள்படி சிங்களத்தில் மொழி பெயர்த்துள்ளார். இதன் விலை ரூ 22-50 சதமாகும். இன்னும் டேவிஸ், மேஜர் ஸ்கின்னர் என்போரின் சரித்திர நூல்களையும் சிங்களத்தில் மொழிபெயர்த்துள்ளார். சிங்கள இலக்கியத்திற்கு இவரைப்போல் சேவைசெய்து வருபவர் மிக மிகச் சொற்பமென்று துணிந்து கூறலாம்.

அவருடன் சுமார் இருமணி நேரம் தமிழர் கூட்டணியின் ஆறம்சத்திட்டங்கள் பற்றி விளக்கிக் கூறினேன். இன்று தமிழ் மக்கள் ஒன்றுபட்டிருப்பதையும் குறிப்பிட்டேன். எனக்கும் அவருக்குமிடையில் நடந்த கருத்துப்பரிமாறலை மிகச் சுருக்கமாக இங்கு குறிப்பிடுகிறேன்.

"தமிழ் மக்களுக்கு குறைகள் இருப்பதாகக் கூறப்படுவதில் உண்மையிருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. நான் சிங்களம் மட்டும் என்ற கொள்கையை எதிர்த்து பல கட்டுரைகள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் எழுதியுள்ளேன். (அவற்றை எனக்குஒவ்வொன்ருகக் காட்டினுர்) எனது கொள்கையை எதிர்த்துப் பலர் [illegible] ருக்கிறேன். தனிச் சிங்களத்தால் சிங்கள ம க்கள் முன்னேற முடியாது என்பதை பத்திரிகைகளிலேயே கூறி விட்டேன்.

சேர் பொன். இராமநாதன் மிகப்பெரிய மனிதர். ஒன் மகான் என்றே கூறலாம். அவர் சிங்கள மக்களுக்குச் செய்த சேவையைப் படித்த சிங்கள மகன் எவனும் மறக்க மாட்டான். சேர் பொன். அருணுசலம் சேர் முத்துக்குமாரசாமி, கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி அனைவரும் தமிழ் மக்களிடையே பிரபலம் பெற்று விளங்குவது போல் சிங்கள மக்களிடையேயும் பிரபலமடைந்துள்ளனர். ஆறுமுக நாவலரின் சேவை பற்றியும் நான் படித்திருக்கிறேன். தமிழ் மக்கள் திறமையை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது.

"இன்றைய தமிழ் தலைவர்களில் திரு. செல்வநாயகம் முக்கிய இடத்தை வகிப்பதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அவரை நான் பாராளுமன்றத்தில் சுமார் 5 வருடங்களின் முன் ஒரு முறை சந்தித்தேன். அவருடன் அரசியல், மற்றும் சிங்கள தமிழ் மக்கள் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடியிருக்கிறேன். அவர் எவருக்கும் துன்பம் செய்ய எண்ணுத ஒரு பெரிய மனிதர். அவருடைய அமைதியான பேச்சும், கனிவான உபசாரமும், தீர்க்கதரிசனமான போக்கும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. அவரைப் போல் ஒரு சிங்களத் தலைவரை என்னுல் காணமுடியவில்லை."

"அவர் கிறிஸ்தவராக இருந்தும் பெரும்பான்மையான இந்துக்களும் தங்கள் பிரதிநிதியாக அவரைத் தெரிவு செய்து வருவதிலிருந்து அவர் பண்பும், அவர் செல்வாக்கும் எத்தகையதென்பதை என்னுல் உணர முடிகின்றது. இந்த தள்ளாத வயதிலும் தமிழினமக்காகத் தன பதவியை விட்டுவிலகியிருப்பது போற்றுதற்குரியது. தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைச் சாத்வீக முறையில் அவர் காலத்திலேயே பெறுவதற்கு ஒன்று சேர்ந்திருப்பது நல்லதற்கே."

தமிழர் கூட்டணியின் ஆறம்சக் கோரிக்கைகளை நீங்கள் விளக்க நான் ஆவதானமாகக் கேட்டேன். என"கேள்விகளுக்கும் நீங்கள் சாதுரியமாகப் பதிலளித்து விட்டீர்கள். இவ்விஷயத்தில் நீங்கள் வெற்றிபெற வேண்டும். நியாயமான கோரிக்கைகளுக்காக சிங்கள மக்கள் உங்களுடனேயே இருப்பர். நான் சிங்களவன். எனக்கொரு கொள்கையுண்டு. ஆனுல் எந்த அரசியல் தலைவரின் படமும் எனது வீட்டில் இல்லை என்பதை நீங்கள் நேரில் பார்த்துவிட்டீர்கள். தமிழர் கூட்டணியின் திட்டங்களை விளக்கி சிங்களப் பெரியார்களின் கருத்துக்களை அறிந்து எழுத விரும்பும் உங்களுக்கு நான் பல சிங்களப் பெரியார்களை அறிமுகம் செய்து வைக்க விரும்புகிறேன். இதற்காக கொழும்புக்கோ, மற்றும் எந்த மாவட்டத்திற்கோ நான் வருவதற்கு என்றும் ஆயத்தமாக இருக்கின்றேன்."

இவ்வாறு கருத்துக்களை ஒளிவு மறைவின்றித் தெரிவித்த அவர் தமது வீட்டை ஒருமுறை சுற்றிக் காண்பித்தார். சுமார் எட்டு அறைகளுள்ள அவர் வீடு முழுவதும் புராதனப் பொருட்களாலும், ஏட்டுச் சுவடிகளாலும் சுவர் சித்திரங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. தமது மூதாதையர்தான் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் காலத்தில் தாய்லாந்து சென்று புத்த பிக்குமாரை இலங்கைக்கு அழைத்து வந்தவர்கள் என்று கூறிய அவர் தாய்லாந்திலிருந்து கொண்டு வரப்பட்ட குத்து விளக்கையும் எனக்குக் காண்பித்தார். அவர் இல்லம், ஒரு நூதனசாலையாக, ஒருபுத்தக நிலையமாக, ஒரு பூந்தோட்டமாக அழகுற விளங்குவதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன்.

சில சிங்களப் பெரியார்களை அவர் துணையுடன் சென்று காண்பதற்கு மீண்டும் விரைவில் வருவதாகக் கூறி விடைபெற்றேன். நன்றி என்றேன். எனக்கு நன்றி வேண்டியதில்லை. நான்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். நீங்கள் தொடங்கியிருக்கும் முயற்சி மிகவும் முக்கியமானது. இன்றைய நிலையில் மிகவும் அவசியமானது. உங்களது இந்த முயற்சி வெற்றிபெற எனது ஆசிகள் என்று கூறி விடைதந்தார். நானும் சுமார் ஐம்பது மைல் தூரத்திலுள்ள எனது இருப்பிடத்தை நோக்கிப் புறப்பட்டேன்.

## நரகாசுரன் இருக்கையில் நமக்கெதற்குத் தீபநாள்!

நரகாசுரனின்னும் இறக்கவில்லை —ஈழ
நாட்டிலும் எம்மோடு வாழுகின்ருன்!
அரக்கத்தனமிங்கே வாழும்போது — அவன்
அழிந்திட்ட ஞாயமே இல்லையென்பேன்!

தமிழினத்தின் மாருத துரோகியாக — ஏழை
தமிழ் மக்களின் இரத்தத்தைக் குடிப்போனுக
எமதீழ நாட்டினிலே பல உருவில் — அசுரன்
இருக்கிருன் இன்னுமவன் சாகவில்லை!

காட்டிக்கொடுக்கிற அசுரனெல்லாம் — சுடு
காட்டில் படுக்கிற. நாள்வராதோ!
நாட்டில் விளக்கேற்றி, கோடி கட்டி — அந்த
நாளை நாம் கொண்டாடும் நாள் வராதோ!

ஆயிரம் தீபங்கள் ஏற்றினுலும் — கோடி
ஆடைகளை விதவிதமாய் மாற்றினுலும்
பேயிருளை நாம் விலக்க முடியவில்லை! — எங்கள்
பைந்தமிழின் நிலையிங்கே உயரவில்லை!

தமிழன்னை அழும்போது விழாவெதற்கு! — இங்கே
தீபங்கள் சொடலைகள் வாழ்த்தெதற்கு!
எமதன்னை எழில் கண்டு தீபமேற்றி — இந்த
இலங்கையிலே நாம்மகிழ நாள் வரட்டும்!

—செ. குணரத்தினம்

## கடமை காத்திருக்கிறது

காசிதாசன்

கட்டுண்டோம் பொறுத்திருந்தோம்
கட்டளைக்கு காத்திருந்தோம்
திட்டம் தீட்டு மட்டும் தீவிரமாய்
திரண்டிருந்தோம்.
கடைமைதனை செய்ய காலம் வருகிறது
சட்டம் எமக்கு சில சர்ச்சைகள்
தந்தாலும்
மட்டம் தட்டில் மடையர்கள்
நினைத்தாலும்
படைகள் பல எமக்கு இன்னல்களை
இழைத்தாலும்
காளையர் நாம் கடைமைதனை
கச்சிதமாய் கவனிப்போம்.
மூளையர் சிலர் மூலையில் நின்றாலும்
முற்பட்டு விட்டோம் முடிவை நோக்கி
கட்டளை பிறக்கட்டும் கடமையைநோக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் தேசிய எழுச்சியின் பிரதிபலிப்புத்தான் தமிழரசு இயக்கம்!

## தமிழினத்தின் அபிலாஷைகளை அங்கீகரிக்க கம்யூனிஸ்ட்கட்சி தவறிவிட்டது!

## சோசலிசத்துக்கு விரோதிகள் நாமல்ல!

### ஆனால் சொந்த இனத்தின் விடுதலையே நம் இலட்சியம்!

(சென்றவாரத் தொடர்ச்சி)

கம்யூனிஸ்ட் இயக்கம் அகில உலக இயக்கமாதலால் அமெரிக்க கம்யூனிஸ்ட்டுகள்கூட ரஷ்ய தலைமைப் பீடத்தை மதிக்கக் கடமைப்பட்டவர்கள். உலகில் இன்று நடக்கும் எந்தப் போட்டியை எடுத்துக்கொண்டாலும் அமெரிக்காவின் வெற்றியா? ரஷ்யாவின் வெற்றியா? என்ற கேள்வியே உலகெங்கும் நிலவுகின்றது. இந்நிலையில் அமெரிக்க மக்கள் அனைவரும், பொதுவுடமைக் கொள்கையை ஏற்றுக்கொண்டவர்கள்கூட தன் தாய்நாடு அமெரிக்காவே எதிலும் வெல்லவேண்டும் என்றுதான் இயற்கையாக விரும்புகின்றார்கள். என்றாலும்கூட, கம்யூனிஸக் கட்சியை இப்படி அகில உலக ரீதியில் அமைத்துவிட்டசிக்கலால் கம்யூனிஸத்திற்கும் தன்னின உணர்ச்சிக்கும் தீராத பிணக்கே தொடர்ந்து வளர்ந்துவருகின்றது.

இந்திய உபகண்ட வடக்கெல்லையில் 1962ம் ஆண்டு சீனக் கம்யூனிஸ்டகள் ஆக்கிரமிப்பு நடத்தியபோது—உபகண்டத்து சகல அரசியல் கட்சிகளெல்லாம் கண்டித்த அதே நேரத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் சிறுவுக்கெதிராக எதையும் கூற முடியாது வாய்பொத்தி - கைகட்டிக் கிடந்ததை நாம் பார்த்தோம். அதன் விளைவு உபகண்ட கம்யூனிசக் கட்சிக்குள் தீராத பிளவை நோய் கண்டிருக்கின்றது.

**தமிழரசும் கம்யூனிசமும்**

எனவே அகில உலக ரீதியில் கம்யூனிச இயக்கம் இயங்கும்வரை அந்தந்த நாட்டு கம்யூனிஸ்ட்கள் தேசிய உணர்ச்சிக்கோ - தன்னின உணர்வுக்கோ தாக்கரிதியான மதிப்பளிக்கமுடியாது. உலக ரீதியில் தொழிலாளி - முதலாளி என்ற செயற்கையான வர்க்க முழக்கங்களைக் கோசமிட்டுக்கொண்டிருப்பவர்களால் மக்களின் தன்னின உணர்ச்சியைப் புரிந்து செயல்படவே முடியாது. அதனால்தான் ஒரு காலத்தில் எமது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வளர்ச்சி கொண்டிருந்த கம்யூனிஸ்ட் இயக்கம் இன்று இளைத்து மெலிந்து அடியற்றுப்போகும் நிலைக்கு வந்திருக்கின்றது. இயக்கம் எதுவாக இருந்தாலும், மக்களின் உணர்ச்சிகளையும் - அபிலாசைகளையும் அரசியல் மதிநுட்பத்துடன் சரியாக எடைஇட முடியாத இயக்கங்கள்—தலைவர்கள் அழித்தொழிக்கப்பட்டதை உலக வரலாற்றிலே இருந்து நாம் படித்திருக்கின்றோம்.

எனவே-எமது தமிழரசுக் கட்சி மக்களின் தன்னின உணர்ச்சிகளுக்கு, மதிப்பளித்து தியாகத்துடன் - துணிவுடன் செயல்பட்டதனால் தான்-எமது மொழி, எமது இனம் - எமது பிரதேசம் என்ற உணர்வை மக்களின் நெஞ்சங்களிலே அகல் விளக்காக ஏற்றிவைத்த காரணத்தால்தான் தமிழரசு தமிழினத்தின் தனிப்பெரும்வல்லரசு என்ற நிலைக்கு வளர்ந்த தோடல்லாது-மாற்றுக் கட்சிகளும் கூட்டணியாக வேகமாக வந்து இணையத் தூண்டியது. எமது இவ்விடுதலை இயக்கம் மக்களின் இன உணர்ச்சியைக் காக்க வாரி வழங்கிய ரத்ததானத்தால் தமிழினத்தின் இரத்த நாளங்களெல்லாம் உணர்ச்சிப் பெருக்கோடு இயங்க ஆரம்பித்துள்ளன.

**பிறவியிலேயே ஊனம்**

உலகத் தொழிலாளர்களே ஒன்றுகூடுங்கள் என்று குரல் எழுப்பிய மார்க்ஸ் எல்லா இன மக்களுக்கும்-நாடுகளுக்கும் இயற்கையாகவே இருக்கக்கூடிய தன்

**கே. எஸ். ஏ. கபூர்**

னின உணர்ச்சியைக் கவனப்படுத்திச் சித்தாந்தம் வகுக்கத் தவறிவிட்டார். பொதுவுடமை ஆட்சியை நிறுவி பல்வேறு இன மக்களையும்-நாடுகளையும் ஒரே கூண்டுக்குள் அடைத்து வைக்கத் துணிந்த மார்க்சின் சித்தாந்தம் பிறவியிலேயே ஊனமாகிவிட்டது. அதனால் தான் ரஷ்யாவின் முதலமைச்சர் "நிகிட்டா குருச்சோவ்" கூட இந்த ஊனப் பிறவிக்கு சத்திரசிகிச்சை செய்யத் துணிந்தார். ரஷ்யா, சீனு போன்ற நாடுகளின் முதன்முதலின் பொதுவுடமை ஆட்சியை அமைக்கும்போது, அந்த ஆட்சி உள்ளேயும் வெளியேயும் இருந்த பகைவர்களால் இடறி விழக்கூடாது என்பதற்காக அன்று கம்யூனிஸ சர்வாதிகாரம் அவசியமானதாக இருந்திருக்கலாம்.

ஆனால் இன்று அக்கொள்கையில் தொழிலாளர்கள் வளர்ச்சியும் வாழ்வும் பெற்றிருந்தால் தொடர்ந்து ஏன் இந்த இருட்டடிப்பும்-இரும்புத்திரையும் - சர்வாதிகார ஆட்சியும்?-எனவே நிலைமை எப்படியாயினும் உலகம் மேலும் மேலும் எண்ணக் கற்றுகொண்ட பிறகு புனிதமான சுதந்திர உணர்வை மனிதஇனம் விட்டுக்கொடுக்கத் தயாராகஇல்லை. பொதுவுடமைதான் உலகத்தில் சமத்துவத்தை நிலைநிறுத்தக்கூடிய கடைசிப் போக்கிடம் என்று எண்ணுகின்றவர்கள்கூட பூரணமான தொரு சுதந்திர ஆட்சியையே விரும்புகின்றார்கள். ஏனெனில் மனித இனம் முழுமையை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் கம்யூனிசம் போன்ற அடக்குமுறைக் கொள்கைகளை (மனித இனம்) சுழத்தமிழ் பேசும் மக்களால் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

மனித இனம் முழு நிறைவான வாழ்க்கை வாழவேண்டுமானால் மக்களிடையே சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம் ஆகியன நிச்சயமான தேவைகளாகும். என்பதை ரூசோ போன்ற அறிஞர்கள் உலகிற்கு உணர்த்தி வைத்திருக்கின்றார்கள். ஜனநாயக ஆட்சியில் பூரண சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுகின்றது. சம உரிமை கிடைக்கின்றது. ஆனால் மார்க்சிச கம்யூனிச ஆட்சியிலோ சமத்துவத்தைப் போதனையில் காட்டி அடிப்படை ஜீவாதார உரிமைகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. எனவே சம உரிமையையும் சமத்துவத்தையும் இணைத்துச் செயல்படும் தமிழரசுக் கட்சியால் - கூட்டு முன்னணியால் தமிழ்பேசும் மக்கள் நிரந்தரமான விமோசனத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதற்கு தமிழரசின் நீண்டகால வரலாறே எடுத்துக் காட்டாகும்.

**சோசலிசமும் தமிழரசும்**

இந்நாட்டின் பொருளாதாரம் ஒரு சிலரின் ஆதிக்கத்துக்குள் தேங்கிக் கிடப்பதை தமிழரசுக்கட்சி எப்போதுமே எதிர்த்தே வந்திருக்கின்றது. சோசலிச அரசியல் அடிப்படையின்கீழ் மக்களின் வாழ்வை மலரச் செய்யமுடியும் என்பதில் தமிழரசுக்கு ஒரு தனி நம்பிக்கை உண்டு. தன்னின உணர்ச்சிக்கு மதிப்பளிக்கும் உயர்ந்த அரசியல் சித்தாந்தம் அதனிடம் இருக்கின்றது. ஆனால் கொள்கை வழி நடத்துவோரின் குளறுபடியால்—தன்னின உணர்வைக் கண்டிப்பதால் சோசலிசம் மாசுபட்டுவிடமுடியாது. 1948ம் ஆண்டு கட்சி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தமிழினத்தின் விடுதலை முழக்கத்தோடு— காலத்துக்குக் காலம் அரசாங்கம் மேற்கொண்டுவந்த முற்போக்கான சோசலிசத் திட்டங்களுக்கும் தமிழரசு தன் வேற்றுமைகளை மறந்து அவ்வப்போது தன் பூரண ஒத்துழைப்பையும் — ஆதரவையும் வாரிவழங்கியே வந்திருக்கின்றது.

பஸ் கம்பனிகள் தேசியமயமாக்கப்பட்டபோது - துறைமுகங்கள் மக்கள் சொத்தாக்கப்பட்டபோது - வெளிநாட்டு எண்ணெய்க் கம்பெனிகள் தேசியச்சொத்தாக்கப்பட்டபோது - வங்கிகள் பொதுமதாக்கப்பட்டபோது - காணி உச்சவரம்பு கொண்டுவரப்பட்டபோது - இப்படி இன்னும் எத்தனையோ திட்டங்களை அரசு கொண்டுவந்தபோதெல்லாம் தமிழரசு நேரடியாகவே அதற்குமுன் நின்று ஆதரவளித்ததை யாருமே மறுக்கமுடியாது. ஆனால் இதில் தமிழரசு சுயநலத்திற்காகவோ-சொந்த லாபத்திற்காகவோ செயல்படவில்லை என்பதை தமிழ் பொதுவுடமைவாதிகள் தெரிந்துகொள்வதற்கு சாட்சியே தேவையில்லை.

**குடியரசை ஏன் தமிழரசு எதிர்க்கிறது?**

ஆனால்-அதே நேரத்தில் குடியரசுத் திட்டத்தைத் தமிழரசு தீவிரமாக எதிர்ப்பதற்கு தன்னின எழுச்சியே முழுக்க முழுக்கக் காரணமாகும். அன்று ஆங்கிலேயர் அமைத்துத் தந்துவிட்டுப்போன அரசியல் அமைப்பில் ஒரு எழுத்தையேனும் திருத்தாமல் இந்நாட்டில் ஒரு பூரணமான சோசலிச அரசியல் கொள்கையை வழிநடத்தமுடியும். சென்ற 'மே' திங்கள் 22ம் தேதி நடந்த குடியரசுப் பிரகடனத்திற்கு முன்பு, முன்பிருந்த அரசியல் சட்டத்தைக் கொண்டுதான் பஸ் - துறைமுகங்கள், எண்ணெய்க் கம்பனிகள், தனியார் பாடசாலைகள், கட்டிடங்கள் போன்றவைகளெல்லாம் தேசியமயமாக்கப்பட்டன - அதற்கு அப்போதைய அரசியல் சட்டம் தடையாகக் குறுக்கிடவேயில்லை. பூரணமான ஒரு ஒத்துழைப்பைத்தான் அச்சட

(7-ம் பக்கம் பார்க்க)

# புனித நோன்பின் மகத்துவம்

புனித இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் நான்காவது கடமை நோன்பாகும். இறைவனால் மனிதனுக்கு அளிக்கப்பட்ட மாபெரும் அருட்கொடைகளுள் நோன்பு மிகச் சிரேஷ்டமானது.

இப்புனிதமான நோன்பின் சிறப்புகளை ஜனங்கள் பூரணமாக அறிந்து கொண்டால் வாழ்நாள் முழுவதும் நோன்பாகவே இருக்கக் கூடாதா என்று குறை பட்டுக்கொள்வார்கள் என்று திரு நபி (ஸல்) திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். நோன்புநோற்பதால் மனிதனுள்ளகெட்ட ஊசலாட்டங்கள் மறைந்து, இதயம் தூய்மையாகப் பிரகாசிக்கின்றது. இந்தநோன்பு நாட்களில் நோற்கும் ஒரு நோன்பானது இதர நாட்களில் நோற்கும் எழுபது வருட நோன்புகளை விடவும் உத்தமமானது. பொறுமைக்கு வித்திட்ட இம் மாதத்தில் செய்யும் ஒவ்வொரு சிறு நன்மைக்கும் பலகோடிப் பலாபலன்கள் கிடைக்கின்றன.

எல்லா நற்காரியங்களுக்கும் இறைவன் சார்பில் மலக்குகளே கூலி கொடுக்கிறார்கள். ஆனால் நோன்புடனிருக்கும் ஒவ்வொரு வருடைய நல் அமல்களுக்கும் இறைவன், தானே கூலி கொடுப்பதாகத் திருமறை மூலம் தெளிவித்திருக்கிறான்; இப்புனித மாதத்தின் முதற் பத்து நாட்களும் அருள் (ரஹ்மத்) நிறைந்ததாகவும் அடுத்தபத்து நாட்கள் பாவ மன்னிப்புக்குரிய நாட்களாகவும் இறுதிப் பத்து நாட்கள் நரகத்தின் நின்றும் விடுதலையளிப்பதற் குரியதாகவும் இருக்கிறது.

பகல் முழுவதும் இறைவனுக்காகப் பசித்திருந்து இரவு முழுதும் இறைவனுக்காக விழித்திருந்து இறை வணக்கத்திலும், நல்ல காரியங்கள் மீது நாட்டங் கொள்ளுவோர் மீதும் இறைவன் மிகுந்த பற்று வைக்கிறான். ஏனெனில் தனது அடியான் தனது நன்றிக் கடனைப் பசித்திருந்து, விழித்திருந்து, தனித்திருந்து செலுத்துவதைப் பார்த்து யார்தான் மகிழ

விடத்தல்தீவு

**இக்பால்**

மாட்டார்கள். இப்படிப்பட்டவர்களை இறைவன் மலக்குகளிடம் சுட்டிக் காட்டி தனது படைப்பினங்களின் மகத்துவத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொள்கின்றான்.

நோன்பு காலத்தில் ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. தினசரி பத்துலட்சம் நரகவாசிகள் விடுதலைசெய்யப் படுகிறார்கள்.

சூரியன் உதிப்பதற்குச் சற்று முன்னிருந்து சூரியன் அஸ்தமிக்கும் வரை வாயினால் உண்ணாது இருத்தலே நோன்பாகும். காலை முதல் மாலை வரை உண்ணாதிருப்பதால் மட்டும் நோன்பு பூரணமாகின்றதெனக் கொள்ளல் தவறாகும். ஐம்புலன்களையும் ஒருங்குபடுத்தி பாவமானவைகளிலிருந்து கண்களையும், கெட்ட எண்ணங்களிலிருந்து இருதயத்தையும், கெட்ட பேச்சுகளில் நின்றும் வாயையும், கெட்ட கேள்விகளிலிருந்து காதையும் கெட்ட நடத்தைகளிலிருந்து கைகால்களையும்காப்பாற்றிஇறைத்தியானத்தில் இருப்பதாலேயே ஒருவனுடைய நோன்பு பூரணத்துவம் அடைகிறது.

இப்படியான பூரணத்துவமுடைய ஒரு நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடையானது இறைவனிடத்தில் கஸ்தூரி வாடையை விடவும் சுகந்தமானதாக இருக்கிறதென்று நபிகள் நாயகம் (ஸல்) அருளியுள்ளார்கள். நோன்புடனிருக்கும் ஒருவனுக்காக உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளும் இறைவனிடத்தில் பாவ மன்னிப்புக் கேட்கிறார்கள்.

ஷைத்தான் என்பவன் மனிதனின் இரத்தம் உடம்பில் ஓடும் இடமெல்லாம் கூடவே சென்றுகொண்டிருக்கிறான். எனவே அவன் போகும் பாதைகளைப் பசியைக்கொண்டு அடைத்துக் கொள்ளுங்கள். பசியினால் வயிறு காய்ந்துபோனால் மனம் அடங்கிவிடும். மனம் அடங்கிவிட்டால் எல்லா உறுப்புகளும் பாவங்களிலிருந்து ஒதுங்கி விடுகின்றன. இதனால் இச்சைகள் ஒடுங்கி உள்ளமும் தூய்மையாகி விடுகிறது என ஒரு ஹதீதில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ரமலான் மாதத்தில் எவன் நன்மைகள் புரிந்து பாவமன்னிப்பு அடையவில்லையோ — அவன் கபோதியை விடவும் கீழ்ப்பட்டவன். அப்படிப்பட்டவன் நாசமாகட்டும் என்று திருநபி (ஸல்) எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

இப்புனித மாதத்தில் ஒரு இரவு வருகிறது. அந்த இரவு ஏனைய நாட்களில் வரும் ஆயிரம் இரவுகளை விட சிரேஷ்டமானது. இந்த இரவில் மலக்குகள் என்னும் அமரர்கள் உலகம் முழுவதும் சுற்றுலாச் செய்து நன்மை செய்வோர்களுக்குச் சோபனம் கூறுகின்றார்கள். இந்த இரவிலே தான் இறைவனின் மாபெரும் அருட்கொடையான புனித திருகுர் ஆனின் முதல் ஐந்து வசனங்களும் 'ஹிரா' மலைச்சாரலில் வைத்துப் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டது. அவ் அருள் மறையான, இறைவனின் வற்றுப்பெருங் கருணையான திருமறையின் சிறப்புகளை எழுத விரிவை அஞ்சி விடுக்கிறேன்.

எனவே முஸ்லிம்களாகிய நாம் அனைவரும் வீண்விளையாட்டுகளையெல்லாம் ஒதுக்கி விட்டு ஆசாபாசங்களையெல்லாம் அடக்கியொடுக்கி நன்மையின்பால் நாட்ட முற்று இப்புனித கடமையைப் பூரணமாக நிறைவேற்றி இறைவனின் அன்பையும் அருளையும் அடைந்து விடிவையும் விமோசனத்தையும் பெற்ற உயர்ந்தவர்களின் கூட்டத்துடன் நம்மையும் சேர்த்தருள நாட்டமுறுவானாக வும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மலையகத் தமிழரின் குடியுரிமைப் பிரச்சினை தமிழினத்தின் உயிர்ப் பிரச்சினை

## அதனைக் கைவிட்டு சமரசம் காண தமிழர் கூட்டணி ஒருபோதும் தயாரில்லை"

## தலைவர் இராசமாணிக்கம் உறுதி!

"தமிழர் கூட்டணி முன்வைத்துப்போராடும் பிரச்சினைகளில் மலைநாட்டுத் தமிழர் குடியுரிமைப் பிரச்சினையே உயிர் பிரச்சினையாகும். மலைநாட்டுத்தமிழர் பிரச்சினையை தள்ளி வைத்து விட்டு எத்தகைய சமாதானப் பேச்சுக்களிலும் ஈடுபடுவதற்கு தமிழர் கூட்டணி ஒரு போதும் தயாராக இல்லை"

—இவ்வாறு தமிழரசுக் கட்சித்தலைவரும் தமிழர் கூட்டணியின் முக்கிய தலைவர்களில் ஒருவருமாகிய திரு. சி. மூ. இராசமாணிக்கம் பத்திரிகைகளுக்கு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் திட்டவட்டமாக வலியுறுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

''தமிழ் மக்களின் பிரச்சினைகளை நேரில் அறியும்பொருட்டு சிங்களத் தலைவர்கள் கோஷ்டியொன்று யாழ்ப்பாணம் சென்றிருந்தது. தமிழர் கூட்டணியினரின் ஆறு அம்சக்கோரிக்கைகளை ஆராய்ந்த இவர்கள் மலையக மக்கள் பிரஜாவுரிமைக் கோரிக்கையைக் கைவிட்டால் மிகுதிக் கோரிக்கைகளைப் பரிசிலனை செய்யலாம் என்று தெரிவித்தனர்.

''ஆனால் இக்கோரிக்கையை எக்காரணம் கொண்டும் கைவிடத் தமிழர் கூட்டணி தயாராகவில்லை. மலை மக்களுக்கு 1948ல் பிரஜாவுரிமை விடயத்தில் ஏற்படுத்தப்பட்ட பாதக நிலைமையே இலங்கையில் தமிழர் பிரச்சினையை இவ்வளவு தூரம் வளர்த்துள்ளது.

''சிங்களத் தலைவர்கள் தமிழர் விடயத்தில் தலையிட எண்ணியதன் மூலம் தமிழர்களுக்கு புதிய அரசியலமைப்பு பாதகம் விளைவிக்கப்பட்டுள்ளது என்பதை ஒப்புக் கொண்டுள்ளார்கள்.''

### ஈழத் தமிழக

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களப்புக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு பி. ப. 5-00 மணிக்கு மட்டக்களப்பு மைதானத்தில் வரவேற்புக் கூட்டம் நடைபெறும்.

தந்தை செல்வா அவர்கள் மட்டுநகரிலிருந்து திருக்கோயில்வரை ஊர்வலமாக மோட்டார் காரில் அழைத்துச் செல்லப்படுவார்.

வரவேற்பு ஊர்வலத்திலும், கூட்டத்திலும் தமிழர் கூட்டணித்தலைவர்களும் பிரமுகர்களும் கலந்து கொள்ள இருக்கின்றார்கள். வடக்கு கிழக்கையும் மலைநாட்டையும் சார்ந்த தலைவர்களும் முக்கியபிரமுகர்களும் இதில் கலந்து கொள்வார்கள்.

—இவ்வாறு வரவேற்புக் குழுவின் சார்பில் திரு. கா. சிவஜெயம் அறிவித்திருக்கிறார்.


தீபாவளி வாழ்த்துக்கள்

அனைவருக்கும் எமது உளம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக.

அதிபர்,

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.


### தமிழ் மக்களின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்டோம். அப்படியிருக்க, நாட்டிலே எத்தனையோ பிணக்குகள் தீர்க்கவேண்டிய அவசரமான அவசியமான பிரச்சினைகளெல்லாம் தேங்கிக் கிடந்து மக்களை அன்றாட கொடூரமாக வாட்டி வதைக்கும்போது - அவைகளைப் பற்றி எல்லாம் சிந்தித்தேனும் கவலைப்படாது - எமது பொருளாதார நெருக்கடிக்குள்ளும் பல லட்சம் ரூபாய்களை விரையமாக்கிக் குடியரசுப் பிரகடனத்திற்கு என்ன அவசரம் வந்தது?

இந்திய உபகண்டம் போன்ற நாடுகளில் அரசியல் சட்டம் சோசலிசத் திட்டத்திற்கு எப்போதுமே எதிரியாகத்தானிருக்கின்றது. அதனால்தான் மன்னர்களின் மான்ய நிறுத்தம், வங்கிகள் தேசியமயத்திட்டம் போன்றவைகள் நீதிமன்ற மூலம் தோல்வியடைந்திருக்கின்றன. எனவே காரணமில்லாமல் எமது அரசியல் சட்டத்தை சோசலிசத்தின் பெயரால் திருத்தியமைக்கத் துடித்த முக்கூட்டு ஆட்சியாளர்கள் எது எப்படி இருந்தாலும் ஒன்றை மட்டும் மறுக்கமுடியாது.

ஆங்கிலேயர் தமிழ்பேசும் சிறுபான்மை மக்களுக்குத் தந்துவிட்டுப்போன (29வது விதி) பாதுகாப்புச் சட்டத்தை முற்றாக நீக்கிவிட்டு அரசியல் சட்டத்தில் அவர்களைப் பாதுகாப்பற்ற அரசியல் அநாதையாக்கவேண்டும் என்ற ஒரே நோக்கம் தான் என்பதை மறைக்கவே முடியாது. இதற்குப் பூரணமான ஆதரவளித்த சிங்களப் பொதுவுடமைத் தோழர்கள், தமிழ் பொதுவுடமைத் தோழர்களின் இனரீதியான நலனைப்பற்றியே கவலைப்படாது ஒரவஞ்சனையும் - ஒழிக தமிழ் பேசும் மக்கள் என்ற நிலையில் செயல்பட்டிருக்கும் போது, தமிழ் பொதுவுடமைத் தோழர்கள் மட்டும் இன்னும் தன்னின உணர்வற்று நிரந்தரமாகக் காட்டிக்கொடுத்தே வாழ நினைப்பது அவர்களுக்கே வெட்கமில்லையா என்று கேட்கின்றேன்?

### நமக்கென்றோர்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மே அரசாங்க மொழியாகவும் நீதி மன்ற மொழியாகவும் கொண்டு வந்துவிட்டது இந்தச் சிங்கள அரசு. சிந்தியுங்கள் தமிழர்களே! இந்த அரசு ஈழத்தை சிங்களமயமாக்கப்பார்க்கிறது. தமிழர்களை உயிருடனேயே சிங்களம் என்ற புதை குழியில் தள்ளப்பார்க்கிறது.

விழித்தெழுங்கள் தமிழ்ப் புலிகளே! காலம் கடந்து விடவில்லை. சிங்களம் என்ற ஓநாயை நம்மிடையே நின்றும் துரத்தி விட்டு நமக்கென்றொரு நாட்டை உருவாக்கி உன்னதமாக வாழ்வோம். சாதி, மத, இன வேறுபாட்டை உதறித் தள்ளிவிட்டு எல்லோரும் தமிழன்னையின் உதரத்திலே உதித்தவர்களே என்பதை உணர்ந்து ஒன்று படுவீர்களா 'வாழ்க தமிழ் நாடு. வளர்க தமிழ் மக்களின் புகழ். ஓங்குக தமிழர்களின் உரிமைக்குரல்!

### நிகழ்ச்சி நிரல் ...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

லான கலைஞர் பாதணிகளுடன் வீற்றிருக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். எமது சைவ ஆலயங்களுள் பிறமதத்தவர் தன்னும் பாதணிகளுடன் உள்வர அனுமதிக்கப்படுவது உண்டா?

5. தமிழராது மங்கள வாத்தியமாம் நாதசுரத்தைக்கூட முற்றாக மறந்து மெல்லிசை இவ்விழாவில் இடம் பெற்றுள்ளது.

6. மெல்லிசையில் ஒரு பாடலின் முடிவில் ஒரு சில இரசிகர்கள் சீக்காய் அடித்து "பாப் இசைவிழா" பாணியில் தமது பாராட்டு தல்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். "வாணி விழா"வில் மெல்லிசையைப் புகுத்தியதன் விளைவு இது.

7. "வாணி விழா" மக்களைக் கவர்ந்து [illegible] விக்க ஏற்பாடு [illegible] வில்லை.

## ஜெர்மன் சிகிச்சை தலைமை அலுவலகம்

96, ஸ்டேஸ் ரேட், கிராண்ட்பாஸ், கொழும்பு-14

பாவனையாளர்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய ஏமாற்று மருந்துகள் மூலம் மேற்கொள்ளப்படும் ஏமாற்று முயற்சிகளிலிருந்து எச்சரிக்கையாயிருங்கள்.

ஆஸ்த்மா மூல வியாதி, அண்டவாய்வு, விதை வீக்கம் காக்காய் வலிப்பு, சிறுநீர் குழாயில் ஏற்படும் நோவுகள், பாரிசவாதம், மாருத நாட்பட்ட எக்சிமா, பற்றுப்படை, சொறி சிரங்கு, கரப்பான் போன்ற பல சரும வியாதிகள், பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் அதிகரித்தல், தாட்படுதல் போன்ற கோளாறுகள் இன்னும் பல வியாதிகளுக்கும் முற்றாக குணப்படுத்துவதற்கேற்ற மருந்து எமது ஹோமியோ தயாரிப்புகளே!

**ஆஸ்த்மா நோயினால் மிகவும் அவஸ்தைப் படுகிறீர்களா?**

உடல் சுகம்பெற கைகண்ட மருந்து!

**ஆஸ்த்மா "அம்போரம்" ஸ்பெஷல்"**

எந்தவிதமான ஆஸ்த்மா நோயானாலும் முதல் ஒரு வேளை மருந்து பாவித்த மாத்திரத்திலிருந்து வலியையும், நீங்கள் படும் அவஸ்தையையும் உடன் போக்கி சுகத்தை அளிக்கின்றது. வருடக்கணக்கில் ஆயிரக் கணக்கானோர் இந்நோயினால் அவஸ்தைப்பட்டவர்கள் தற்பொழுது நிரந்தரமான பூரண சுகத்தைப் பெற்றுள்ளார்கள். "அம்போரம் ஸ்பெஷல்" சிறுகுழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் ஒரு சிறந்த நிவாரணி.

480 துளிகள் ரூபா 40/-
240 துளிகள் ரூபா 20/-
120 துளிகள் ரூபா 10/-

**நீரழிவு, மூத்திரக் கல்லடைப்பு வியாதிகளுக்கு**

**'ஜித் 99' மருந்து**

சிறுநீரில் சீனி, வெள்ளை வெட்டை, தீராத மதுமோகம், அதிக தாகம், உடல் மெலிவு, மூட்டுக்களிலுள்ள குத்து, வலி, உறுப்புக்களில் ஏற்படும் கடூரமான எரிவு, உஷ்ணம், உணர்ச்சி இல்லாமை போன்ற எந்த நீரழிவு வியாதியையும் தீர்க்க வல்ல ஒரு சிறந்த மருந்து. சிறுவர்களுக்கும் பெரியோர்களுக்கும் ஏற்ற பரீட்சித்து தயாரிக்கப்பட்ட சிறந்த மருந்து. உண்மையானதும், மிகவும் வேண்டியதும்.

960 துளிகள் ரூபா 45/-
480 துளிகள் ரூபா 25/-

**அம்போரம் ஸ்பெஷல்**

வேறு எங்கும் விற்பனைக்கில்லை. இது P. M. என்ற வர்த்தகப் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கீழ் கண்ட முகவரியில் மாத்திரம் பெறலாம்.

**பீனிசத்திற்கு பாவியுங்கள் "சைன்கா"**

எந்த விதமான பீனிசத்திற்கும் ஒரு நிச்சயமான நிவாரணி

காலையில் தொல்லை தரும் இடைவிடாத தும்மல், மூக்கிலிருந்து நீர் கொட்டுதல், ஓயாத தலையிடி, ஆயாச அலட்சியம், தலைப்பாரம், முடி உதிர்தல், அல்லது நரைத்தல் முதலியன போன்ற பீனிசக் காரணத்தால் ஏற்படும் சகல வியாதிகளையும் குணப்படுத்த வல்லது. பரிபூரண பாதுகாப்பானது. தீங்கான விளைவுகளை உண்டுபண்ணாதது.

சைன்கா 480 துளிகள் ரூபா. 30-00, 240 துளிகள் ரூபா. 15-00

தபாற் செலவு சதம் 60

75 சத முத்திரையுடன் வரும் வி. பி. பி. ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வைத்திய ஆலோசனைகளுக்கு:

**ஜெர்மன் சிகிச்சை தலைமை அலுவலகம்**

GERMAN TREATMENT HEADQUARTERS

96, ஸ்டேஸ்ரேட், கிராண்ட்பாஸ், கொழும்பு-14 தொலைபேசி: 35966

பணங்களும், கடிதங்களும் டாக்டரின் பெயருக்கே அனுப்பப்படவேண்டும்.

DR. P. M. SARATHCHANDRA J. P. M. D. H.

டாக்டர் பி. எம். சரத்சந்திர J. P., M. D. H. அமெரிக்கா M. H. S. லண்டன்.

வேறு எந்த இடங்களிலும் எமது கிளைகள் கிடையாது.

[illegible] ரங்களைக் கொண்ட "ஹோமியோபதி என்றால் என்ன" [illegible] புத்தகத்தை எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பெண்கள் பக்கம்:

# நமக்கென்றோர் நாட்டை அமைப்போம்! அங்கு விடுதலைபெற்ற மக்களாக வாழ்வோம்!

## செல்வர் படையில் இணைவோம் சிங்காரத் தமிழைக் காப்போம்!

### விடுதலைப்போரில் பெண்கள் கடமை!

எமது தாய்மொழியாம் தமிழிற்கு இன்னல் வந்திருக்கின்ற இந்நேரத்தில் ஒவ்வொரு தமிழனுக்கும் எந்த நேரத்திலும், எந்த வேலையை செய்யும்போதும் விடுதலைப் போராட்டத்தின் நினைவே இருக்கவேண்டும். உயிர்மூச்சே தமிழின் நினைவாக இருக்கவேண்டும்.

விடுதலை உணர்ச்சியூட்டக் கூடிய நல்ல தமிழ் சுலோகங்கள் எழுதி அச்சிட்டு பணத்திற்கோ அல்லது இலவசமாகவோ விநியோகித்தால், தமிழர் தம் தம் இல்லங்களில் வைத்துக் கொள்ளலாம். தாய்மார் குழந்தைகளின் உள்ளங்களில் தாய்மொழிப் பற்று உணர்ச்சி, வீரம் எல்லாம் இச்சுலோகங்களின் உதவியால் வளரும்.

இச்சுலோகங்களினூலோ அல்லது மக்களிடம் சேர்த்தோ பணம் சேர்த்து எமக்காக போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் கவிஞர் காசி ஆனந்தன், மற்றும் தேவையானவர்களுக்கு கொடுக்க வேண்டும்.

அடுத்ததாக, ஈழத்தமிழ் நாட்டில் எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் தமிழ் கூட்டணி ஆதரவாளர்களை போட்டியிடச் செய்து சகல வட்டாரங்களிலும் தமிழ் எதிரிகளை கட்டுப்பணம் இழக்கச் செய்து அமோக வெற்றியடைய வேண்டும். இதனால் தமிழ் கூட்டணிக்கு இருக்கும் ஆதரவை கூட்டி எமது போராட்டத்தை விஸ்தரித்து எமது துரோகிகளை வாய்மூடச் செய்யலாம்.

இன்னும் பொய்ச் செய்திகளை பிரசுரிக்கும் ''சிங்கள பதி''யை தமிழர்கள் மானமுள்ள தமிழனுக்கு பிறந்தவர்கள் யாவரும் பகிஷ்கரிக்கவேண்டுமென மக்களுக்கு பிரசாரம் செய்ய வேண்டும். இப்பத்திரிகை யாழகத்தில் தொடர்ந்து விற்பனையாகுமென்றால் விற்பனையாளர்களின் கடைகளின்முன் எம் போராட்டம் வலுவடையும்போது மறியல் செய்யலாம். எப்படியாகிலும் 'சிங்கள'பதியை மானமுள்ள தமிழர்கள் கைகளில் இருக்கப்படாது. இருக்க விடப்படாது.

தமிழர் கூட்டணியின் தொண்டர்படையில் பெண்களின் பங்கு என்ன? மாதர் படையும் உண்டா? தமிழர் விடுதலை இயக்க உதவிக்கு வேண்டிய நிதியை அல்லது அரிசியை சேர்ப்பதற்கு ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியாக ஒருவரை தெரிவுசெய்தால் என்ன? எங்கள் அபிப்பிராயங்களை, ஆசைகளை எழுதியிருக்கிறோம்.

—திருமதி விநாயகசேகரம்,
யாழ்ப்பாணம்.

சிறகொடிந்த பறவையின் நிலையிலேயே இன்றைய ஈழத் தமிழர்களாகிய நாம் வாழ்கிறோம். பறவையின் சிறகொடிந்து விட்டாலும் அது தன் கால்களின் உதவியினால் தன்னுயிரைக் காக்க முயற்சிசெய்யாதோ! நிச்சயமாகச் செய்யும்.

இதே மாதிரித்தான் தற்போதைய அரசியலைக்கொண்டு நடத்தும் புல்லுருவிக் கூட்டத்தாரால் வருத்தப்பட்டு சிறுபான்மைத் தமிழர் சிறகொடிந்த பறவையின் நிலையிலிருந்தாலும் தன்னுயிரிலும் மேலானதாகிய தமிழரின் தன்மானஉணர்ச்சியை இழந்து விடக்கூடாது. 'வெற்றி! இன்றேல், வீரமரணம்' என்ற வீரப்பரம்பரையில் உதித்த தமிழர்களாகிய நாம், தமிழனின் தன்மானத்தை மீட்கவும், பெயருக்குச் சோசலிசம் பேசித்திரியும் சிங்கள ஓநாய்களின் ஓரவஞ்சினையை முறியடிக்கவும் நிச்சயமாக போராட வேண்டும்.

'நமக்கென்றொரு நாடு' பெறப்போகும் ஈழத்தமிழர்களாகிய நாம் நம்முடைய இன, மொழி, பண்பாடு முதலியன அழிந்துபோகாது காப்பாற்ற வேண்டும். 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு. நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே' என்ற பொன்னடியைச் சிரமேற்கொண்டு, தந்தை செல்வாவின் அறப்படையில் சேர்ந்து ஒன்றாக உழைத்திடுவோம்.

புதிய அரசியலமைப்புத் திட்டத்தை எதிர்த்துப் போராட வேண்டியது. நம்முடைய பொறுப்பு இல்லையேல் ஈழத்திருநாட்டில் தமிழினம் என்று ஒன்று வாழ்ந்த வரலாறே இல்லை என்று பிற்கால சந்ததியார் எண்ணும்படி நாடே சிங்கள மயமாகிவிடும்.

அறிவுப்பானதயில் தமிழர் முதலிடத்தை ஆகரமித்ததால் தமிழ் மாணவர்கள் அதிக புள்ளிகள் எடுக்க

### செல்வி. தமிழரசி மாலினிவேதநாயகம்

---

தமிழ்த்தேசிய இனத்திடையே இன்று ஏற்பட்டுள்ள எழுச்சியும் விடுதலை உணர்வும் தமிழ்ப்பெண்மணிகளையும் கவர்ந்து, அவர்களது உள்ளங்களிலும் ஊடுருவி விட்டது. கடந்த 8-10-72ல் யாழ் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்துக்கு ஏராளமான பெண்கள் கலந்துகொண்டதை யிட்டு தந்தை செல்வாவே வாய்விட்டுப் பாராட்டியுள்ளார். பெண்களிடமிருந்து நமக்கு வந்திருக்கும் சில உணர்ச்சிகரமான கட்டுரைகளையும் கவிதைகளையும் இங்கு தருகிறோம்.

—ஆசிரியர்.

---

## 'குட்மார்னிங்' வேண்டாம்! வணக்கம் சொல்லுவோம்!

பிச்சை வாழ்வை விரும்பி தன் மொழி அடிமைப்பட்டிருக்கும் போது கவலையற்றிருப்பவர்கள் தமிழர் அல்லர் புன்புலால் உடம்பைப்போற்றி, மண்ணின் இன்பங்களை எண்ணி, தாய்மொழியைத் துரோகிகள் புறக்கணிக்க தாய்மொழியில் அன்பில்லாதிருப்பவன் தமிழனுமல்ல — மனிதனுமல்ல. மாக்கான் இனத்தைச் சேர்ந்தவன்.

மான உணர்ச்சி மிக்க இரத்தம் ஓடும் உண்மைத் தமிழர்களே இவர்களுடைய கதைக்குச் செவிசாய்க்காதீர்கள். இந்தத்தடவை தமிழ் அன்னையின் கட்டுக்கள் அறுத்தெறியப்படும். எங்களினால் எதிர்காலத்தை மாற்றமுடியும். ஆகையினால் தான் நிகழ்காலத்தை ஆளுகிறவர்களுக்கு எம்மேல் கோபம் ஆத்திரம் உண்டாகிறது. நம்மை அடக்கி ஒடுக்குகிறார்கள். சுதந்திரமான எதிர்காலம் எமக்காகக் காத்திருக்கிறது.

அன்பு நிறைந்த மாணவ மாணவிகளே, எல்லோரும் எமது இனிய தமிழில் பேசுவதில் பெருமையடையுங்கள் நான் மாணவியாக இருப்பதனால் சில யோசனைகள் கூற விரும்புகிறேன். தமிழன் தமிழனுடன் தமிழில் தான் பேசவேண்டுமென்று சுதந்திரனின் வேண்டுகோளுக்குச் செவிசாயுங்கள்.

பாடசாலையில் உங்களுடைய வாழ்த்துதல்களை ''காலை வந்தனம்'' அல்லது ''வணக்கம்'' என்று கூறுங்கள். ''குட்மார்னிங் சொல்வதை விட்டுவிடுங்கள். உங்களுடை வீண் செலவுகளைக் குறையுங்கள்.

சிற்றுண்டிச்சாலைக்கான காசு, ஆடம்பரமான செலவு படம் பார்த்தல் போன்றவற்றைக் குறைத்து நீங்கள் சேர்த்த காசை மாதம் ஒரு முறை ஒரு ருபாவோ இரண்டு ரூபாவோ சேர்த்து உங்களுடைய பிரதிநிதி ஒருவர் மூலமாகத் தமிழ்த் தொண்டிற்குச் செலவு செய்யுங்கள்.

தமிழினத்தின் விடுதலையையும், உரிமைகளையும் பெறுவதில் கூடுதலான சக்தி உங்களுடைய கையில்தான்.

உங்களிடையே உள்ள உற்சாகம் குறைந்த மாணவியர்க்கு உங்கள் பாடசாலை சங்கங்களின் மூலமாகவோ வேறு விதமாகவோ தமிழுணர்ச்சியை ஊட்டுங்கள்!

''ஐயமுண்டு பயமில்லை மனமே — இந்த ஜென்மத்தில் வெற்றியுண்டு!''

றேகினி மூத்ததம்பி
யாழ்ப்பாணம்.

வேண்டும். எந்த வேலைக்குச் சென்றாலும் சிங்களம் தெரிந்திருந்தாலே கிடைக்கும். அது மட்டுமா! சிங்கள

(7-ம் பக்கம் பார்க்க)

## சிங்களவரின் மன்றாட்டம் கல்வியமைச்சரின் கொண்டாட்டம் மாணவரிடமோ திண்டாட்டம்

மன்னார் மாவட்டத்தில் மன்னாரில் இருந்து பத்து மைல் தொலைவில் உள்ளது பேசாலைக் கிராமம். அங்கு வாழும் மீனவர்களின் கண்களில் ஒன்றுபோல் உள்ளது தான் பேசாலை மகாவித்தியாலயம். அங்கு உறங்கிக் கிடந்த மாணவமணிகளைத் தட்டி எழுப்பினர் இன்றைய ஆசிரியர் சமுதாயம் முன்னேற்றப் பாதையில் முதல் அடி வைத்த மாணவர்களிடம் குறுக்கிட்டது பெரியதொரு பிரச்சினை அதுதான் குருவின் பெண்பால் குருத்துமியா?

தொழில் அற்ற தங்கள் பிள்ளைகளுக்குத் தொழில் தர வேண்டும் என்று கல்வி அமைச்சரிடம் மன்றாடினர் சிங்களவர். அதை நிறைவு செய்யத் தமிழ் இடங்களில் சிங்கள ஆசிரியர்களை நியமிப்பது என்று திட்டம் வகுத்தார் கல்வி அமைச்சர். திட்டம் நிறைவேறுகிறது என்று அவர் மனதில் கொண்டாட்டம், அதன் பிரதி பலிப்பே மாணவர் மத்தியில் இந்தத் திண்டாட்டம்.

பேசாலை மகாவித்தியாலயத்துக்கு சிங்கள ஆசிரியர் வரப்போவது ஒரு மாதத்துக்கு முன்பே வெளியாகி விட்டது. உங்களுக்கு ஒரு சிங்கள ஆசிரியர் வருவார். 'ஆயுபோவன் குருத்துமி' என்று சொல்ல வேண்டும் என்று கற்றுக்கொடுத்தாராம் ஒரு தன்மானம் அற்ற தமிழ் ஆசிரியர்.

பசுப்பால் சுவைப்பவரிடம் பழப்புளி கரைத்துக் கொடுத்தால் எப்படி இருக்கும். இன் தமிழ் பயின்றிடும் பாலருக்கு அன்னிய மொழி அருவருக்காதா? ஆயிரம் தான் முயன்றாலும் பூங்கொடி மரமாகிவிடுமா? எத்தனை பயிற்சி கொடுத்தாலும் புள்ளிமானைக் காளை ஆக்கிவிடமுடியுமா? காளைகளைப் பூட்ட வேண்டிய வில்வண்டியிலே, மானையும் மயிலையும் பூட்டலாமா? இனிய தமிழ் இசைத்த மாணவனிடம் இன்னொருவன் மொழியைப் புகுத்தலாமா?

ஆசிரியரின் விரிவுரைக்கு மாணவன்மொழிபெயர்ப்பு.

கல்வி அமைச்சரின் சிந்தனை சிக்கலானதுதான். நியமிக்கப்பட்ட சிங்கள ஆசிரியருக்கோ 'அ'வின் அடுத்த எழுத்து தெரியாது மாணவனுக்கோ 'அயண'வின் அடுத்த எழுத்துத் தெரியாது. ஆசிரியரோ ஏதோ மாணவர் முன்னின்று விளாசித் தள்ளுகிறார். மாணவரோ வியப்புடன் விழிக்கின்றனர். சிங்கள ஆசிரியரின் விரிவுரைக்கு ஏதோ ஓர் இரண்டு சிங்களம் தெரிந்த மாணவர் விளக்கம் கூறுகின்றனர்.

முதலில் அந்த மாணவனுக்கு சம்பளம் வழங்குமா இந்த அரசாங்கம்.

கேட்பதற்கு யாரும் இல்லை. கேட்டதற்குப் பதிலும் இல்லை.

—கிறிஸ்ரின் மார்க்குப்பிள்ளை
பேசாலை.

## அகிம்சை தரும் பாடம்

எழுந்தார் செயல் புரிந்தார்; இனி
எது தடை எமக்கு
எழுந்தார் படை திரண்டார்; இனி
என்றும் இலை பிரியார்!
கடந்த பகை மறந்து; இனம்
காக்க வகை கண்டார்
கிடந்த குறை நிறை வாழ் தமிழ்
இனியே மொழி விழியே!

திரண்டார் ஒன்று திரண்டார்; தமிழ்
திண் தோள் விறல் வீரர்
மருண்டார் பகை வெருண்டார்
மறவர் திறன் வியந்தார்!
அடிமை நிறை மிடிமை
அடைந்தே, தினம் வாழ்தல்
மடமை' எனக் கண்டோம்; எனில்
மறவர் துடித்தெழாரோ!

அகிம்சை தரும் பாடம்; இன்று
அடைந்த முதல் வெற்றி
அகிம்சை வழி நின்றே; இனி
அன்னைத் தமிழ் காப்போம்!
அண்ணன் தம்பி தங்கை; அன்பு
அக்கா தாய் தந்தை
அண்ணல் மகாத்மா வழி
அணி திரள்வோம் பணிபுரிவோம்!

துறந்தார் பதவி துறந்தார்
தொண்டர் தந்தை ஆனார்
பறந்தார் நாவடக்கத்; தந்தை
பழுத்த முடிவு தந்தார்
சிறையில் உடல் கிடக்க; உயிர்
செந்தமிழ்க்காய் தினம்பாட
பறையில் நிறை வெற்றி
அறைவோம் வெகுவிரைவே!

— [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(29)

## நானும் கலைஞரும் 'ஒரு சாதி'

# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

கோவை-மகேசன்

தமிழக முதல்வரும் தி. மு. கழகத் தலைவருமாகிய கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களும் நானும் ஒரே 'சாதியை' சேர்ந்தவர்கள் என்ற உண்மையை இங்கு கூறிவிடுவது நல்லதென்று நினைக்கிறேன்.

என்ன இது 'சாதி' பேதம் பேசுகிறுனே என்று முகத்தைச் சுளித்துக் கொள்ளாதீர்கள். கலைஞரும் நானும் ஒரே சாதியை — தமிழ்ச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்கின்ற உண்மை உங்களுக்குத் தெரிந்தாலும், 'தொழிலாலும்' நாங்கள் இருவரும் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் தாம். அவரும் ஓர் எழுத்தாளர்—பத்திரிகையாளர்—நானும் ஓர் எழுத்தாளர்—பத்திரிகையாளன். இருவருமே 'எழுத்தாளர் — பத்திரிகையாளர்' சாதியைச் சேர்ந்தவர்களே.

கலைஞர் கருணாநிதியவர்கள் பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கும்போது, கையெழுத்துப் பத்திரிகையாக ஆரம்பித்த 'முரசொலி' தான் இன்று தமிழ் நாட்டின் ஒரு சிறந்த நாளேடாகவும், தி. மு. கழகத்தின் கையானாகவும் திகழுகிறது.

ஒரு பத்திரிகைக்காரனுல் தான் மற்றோர் பத்திரிகையாளனை உணர்ந்துகொள்ள முடியும். முரசொலி ஏட்டினை எவ்வளவு தூரம் கலைஞர் அவர்கள் விடா முயற்சியுடனும் ஆர்வத்துடனும் கட்டிக்காத்து வளர்த்தெடுத்தார் என்பது பலருக்குத் தெரியாது. 'முரசொலி' வளர்ந்த கதையை கலைஞர் அவர்களே ஒரு முறை பின்வருமாறு எடுத்துக் கூறியிருந்தார்.

'1940ம் ஆண்டில் திருவாரூரில் தமிழ் நாடு தமிழ் மாணவர் மன்றம் என்கின்ற ஒரு மன்றத்தை நான் உருவாக்கி அதற்கான கிளைகள் எல்லாம் ஆங்காங்கு உருப்பெற்ற அந்தக் காலத்திலே—முரசொலி 1938, 1939ம் ஆண்டுகளில் கையெழுத்து ஏடாக இருந்து—பிறகு 40ம் ஆண்டிலே துண்டு அறிக்கைகளாக வெளியிடப்பட்டது. துண்டறிக்கை வெளியிடுவது என்றால் — 20 பேரிடத்திலே நன்கொடை வசூலித்து வெளியிடுவது. அப்பொழுது நன்கொடை—பெரிய தொகையே எட்டணாதான்; அதைத் தருவதற்கு அவர்களும் கொஞ்ச நேரம் சலித்துக் கொண்டு — அழுது கொண்டு கொடுப்பார்கள். இப்படி வாங்கி 10 ஆயிரம் துண்டறிக்கைகள் வெளியிடுவோம்! அதை ஒவ்வொருவருக்கும் 200, 500 என்று அனுப்பி வைத்து ஆங்காங்கு இருக்கின்ற சுயமரியாதை இயக்க நண்பர்கள் திராவிடர் கழக நண்பர்கள்—அதை வாங்கி இலவசமாக மற்றவர்களுக்கு விநியோகிப்பார்கள்! இப்படி முரசொலி மூலமாக கருத்துக்களை நான் திருவாரூரிலேயிருந்து பரப்பிக் கொண்டிருந்தேன்.

'அந்தக் காலத்திலே என்னுடைய எழுத்துக்களிலே மிகுந்த வேகம் இருக்கும். கும்பகத்திலே நடைபெற்ற வர்ணாச்சிரம மாநாட்டைப் பற்றி எழுதும் போது முதல் வரியில், 'பரணி பல பாடி பாங்குடன் வாழ்ந்த பைந்தமிழ் நாட்டில்—சொரணை சிறிதுமிலா சுயநலத்துச் சோதரர்கள் சிலர் கூடி வருணத்தை நிலைநாட்ட வகையின்றி கரணங்கள் போட்டாலும்—மரணத்தின் உச்சியிலே மானம் காக்க மறத் தமிழா போராடு!' என்று நான் எழுதியிருந்தேன்.

'அடுத்த வசன நடையிலே இது ஆரம்பமாகும்: 'தில்லையிலே—திட்சிதர் கோட்டையிலே—தலைதயாபரர் கானமழக்கத்தோடு காளியிடம் காலைத் தூக்கி கேலித்தனம் செய்த கைலைப் பரம்பரை' இப்படி சுயமரியாதை வார்த்தைகளை — சுயமரியாதை இயக்க எண்ணங்களை— வேகமாகச் சொல்லிக் கொண்டிருந்த காலம்.

'அப்பொழுது முரசொலி துண்டு அறிக்கைகளாக வெளியிடப்பட்டு வந்தது. அதனுடைய ஆண்டு விழா— திருவாரூரிலே நடத்தப்பட்டது — அப்பொழுது இளந்தாடி நெடுஞ்செழியனாக இருந்த நம்முடைய நாவலர் அவர்கள் அந்த விழாவிற்கு பேராசிரியர் அன்பழகனோடு வந்திருந்து அந்த விழாவினை நடத்தினார். அவர்களுடைய வழிச்செலவுக்கு கொடுக்கப் பணமில்லாமல் — கூட்டம் நடத்துவதற்கான செலவைச் சரிக்கட்டுவதற்குப் பணமில்லாமல் என்னுடைய கழுத்திலபோட்டிருந்த தங்கச் சங்கிலியை—என்னுடைய தாயாருக்குத் தெரியாமல் விற்று—வழி அனுப்பி வைத்தேன்.

'இப்படித் துண்டு அறிக்கையாக வந்த முரசொலி பத்திரிகைக்கு ஆண்டு விழா நடத்திய காலம் எல்லாம் ஒன்று இருந்தது. ஏன் ஆண்டு விழா நடத்தினேம் என்றால் ஓராண்டு அது உயிரோடு இருந்தது என்பதற்காக ஆண்டுவிழா நடத்தினேம்.

'பிறகு அதையே வார ஏடாக திருவாரூரிலேயிருந்து நான் வெளியிட்டேன். வார ஏடாக வெளியிட்ட போது என் வீட்டிலிருந்த தவலைகள் செம்புகள் அத்தனையும் அடமானம் வைத்துத்தான் ஒவ்வொரு வாரமும் பத்திரிகை வெளிவர வேண்டும். அப்பொழுதுகூட ஐயாயிரம், ஆறாயிரம் பிரதி விற்றுக் கொண்டிருந்தது. வார ஏடாக வந்த நேரத்திலே திருவாரூரிலே கருணாநிதி அச்சகம் என்று ஒரு அச்சகம் இருக்கிறது. பல பேர் எண்ணிக் கொண்டிருந்தார்கள் அது எனது சொந்த அச்சகம் என்று;

'திருவாரூர் வட்டாரத்திலே கருணாநிதி என்ற பெயர் அதிகம். ஏனென்றால் கருணாநிதி சாமிகள் என்று ஒருவர் அங்கே அடக்கமாகி இருக்கிறார்.

'அந்தப் பெயரைத்தான் என்னுடைய பெற்றோர்கள் எனக்கு வைத்தார்கள். அதே பெயரிலே இன்னொரு அச்சகம் இருந்தது. இந்தப் பெயர் குழப்பத்தினால்— சொந்த அச்சகம்தானே! இவன் சுலபமாக பத்திரிகை நடத்துவான் என்று பல பேர் எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த சொந்த அச்சகத்தில் ஒவ்வொரு தடவையும் பழைய பாக்கியைக் கொடுக்காவிட்டால் பத்திரிகை வராது.

இப்பொழுது [illegible] நகர சபைக்குத் தலைவராக இருக்கிற கருப்பை என். ஜமால் என் ஆருயிர் நண்பர்.

அவர்தான் அந்த அச்சகத்தின் உரிமையாளர்; பணத்தில் கண்டிப்பு; நன்றாகப் பழகுவார்; அன்போடு பழகுவார். ''வாருங்கள்; உட்காருங்கள், பத்திரிகை எல்லாம் அச்சடித்தாகி விட்டது'' என்று சொல்வார்கள். ''சரி கொடுங்கள், அடுத்த வாரம் பணம் தருகிறேன்'' என்று சொன்னால் —அதிலே மாத்திரம் ரொம்பக் கட்டாயம் என்று உங்களுக்குத் தெரியாதா? என்று சொல்லுவார்.

எப்படியோ பணம் தந்து பத்திரிகைகளைக் கட்டாகக் கட்டி நானும் முரசொலியினுடைய செயலாளராக இருந்த கனகசுந்தரம் என்பவரும் எடுத்துச்செல்வோம். கனகசுந்தரம் இப்போது மலேயாவில் இருக்கிறார்.

'அந்த நண்பரும், இரண்டு பேரும் அந்தப் பத்திரிகைகளை வண்டியிலே | போட்டு வீட்டிற்குக்கொண்டு வந்தால் — வண்டிச்சத்தம் கொடுக்கவேண்டுமேயென்பதற்காக அதை மிச்சப்படுத்த — இரண்டு பேரும் முரசொலிக் கட்டுகளை தலையிலேயே தூக்கி வைத்துக் கொண்டு — திருவாரூர் விஜயபுரத்திலேயிருந்து— கிட்டத்தட்ட இரண்டு மைல் தூரத்தில் உள்ள என்னுடைய முரசொலி அலுவலகத்திற்கு அதைக் கொண்டு வருவோம்! வருகிற வழியிலே கொஞ்சம் தூரத்தைக் குறைவு படுத்துவதற்காக ஓடம் போக்கி ஆற்றுப் பாலம் வழியாக வருவோம்! அது தென்னை மரத்தால் ஆன பாலம். அதில் நடக்கும் போது சாய்ந்து சாய்ந்து நாங்கள் கரகாட்டம் போல ஆடிக்கொண்டு — அவ்வளவு சாகசம் செய்து கொண்டு அதைக் கடந்து பத்திரிகைகளை தலையிலே சுமந்து கொண்டு வருவோம்.

பத்திரிகையை நாங்களே மடித்து நாங்களே ஒட்டி நாங்களே விலாசம் எழுதி மற்றவர்களுக்கு அனுப்பி வைத்தது அந்தக் காலம்!

பிறகு அதே பத்திரிகையை சென்னை மாநகரத்திலே வார இதழாக தொடர்ந்து நடத்தி இன்றைக்கு முரசொலி — திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய படைக்கலத்திலே ஒன்று— என்கின்ற அளவுக்கு ஒரு நாளேடாக மலர்ந்திருக்கிறது. நான் அதிலே தொடர்ந்து ஆசிரியராக இருக்க முடியாமல் — தமிழ் நாட்டுப் பொது மக்கள் [illegible] அதன் காரணமாக அமைச்சரவையிலே ஒருவனாக அதி—அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு முதலமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற நிலைமைக்கு ஆளான காரணத்தினால் அதனுடைய முழுப் பொறுப்புகளையும் — நான் நிறுவனராக இருக்கிறேன் என்ற ஒன்றைத் தவிர எல்லா பொறுப்புகளையும்— தம்பி மாறனிடத்திலும், செல்வத்தினிடத்திலும் மற்றவர்களிடத்திலும் ஒப்படைத்திருக்கிறேன்.

இவ்வாறு கூறுகின்ற கலைஞர் அவர்கள், 'முரசொலி' ஏட்டினை மாறனிடத்தும் மற்றவர்களிடத்தும் ஒப்படைத்துவிட்டாலும், அவரது ''பத்திரிகை உள்ளம்'' அமைதியடைந்து இருப்பதில்லை.

பொதுக் கூட்டம், அரசாங்க நிகழ்ச்சிகள், கலைவிழாக்கள் அது இதென்று ஒவ்வோர் நாளும் ஓய்வில்லாத நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சோர்ந்துபோய் வீடு திரும்புகின்ற கலைஞர்— முரசொலியையும் மறப்பதில்லை. இரவு எத்தனை மணி சென்றாலும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, மறுநாள் முரசொலியின் தலைப்புச் செய்தி என்ன— அதன் தலையங்கம் என்ன, வேறு செய்திகள் என்னென்ன வெளிவருகின்றன என்று விசாரிக்காமல் அவர் தூங்கச் செல்வதில்லை. தலைப்புக்கள் அவருக்கு பிடிக்காவிட்டால் அவரே வேறு தலைப்புக்களைக் கூறுவதுமுண்டாம். இந்த உண்மைகளை முரசொலியில் பணியாற்றும் அடியார் அவர்கள் என்னிடம் கூறினார்.

நான் முன்னர் குறிப்பிட்டதுபோல ஒரு பத்திரிகையாளனுல்தான் மற்றோர் பத்திரிகையாளனைப் புரிந்துகொள்ளமுடியும். பத்திரிகைத் துறையில் கலைஞருக்கு இருக்கின்ற ஆர்வத்தை என்னுல் புரிந்துகொள்ளமுடிந்தது.

கலைஞர் அவர்களை 1971ம் ஆண்டு பெப்ரவரி திங்களில் தமிழகம் சென்றிருந்த போதுதான் முதன் முதலாகச் சந்தித்தேன் — அதுவும் ஒரு திருமண மேடையில். சென்னை கோடம்பாக்கத்தில் நடைபெற்ற இத்திருமண விழாவில், நான் சென்னையில் தங்கி நிற்பதை அறிந்த விழா நிர்வாகிகள், என்னையும் கலந்துகொள்ளும்படி கேட்டிருந்தனர்.

மேடையில் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமியுடன் உரையாடிக் கொண்டிருந்த போது, இலங்கையைப் பற்றியும், இங்குள்ள பிரச்சினைகள் குறித்தும் அவர் அக்கறையுடன் கேட்டறிந்தார். தான் இலங்கைக்கு வந்து சென்ற பழைய நிகழ்ச்சியொன்றையும் எடுத்துரைத்தார்.

திடீரென்று, கரவொலி வானைப் பிளந்தது - அதோ 'சி. எம்.' (Chief Minister) வந்துவிட்டார், வந்துவிட்டார் என்று மக்கள் ஆர்ப்பரித்தனர். தமக்கேயுரிய கம்பீரமுமான நடையில், எழில் முகத்தில் புன்னகை தவழ கலைஞர், மேடையை நோக்கி வந்துசேர்ந்தார்.

மேடையில் ஏறியவுடன் கே. ஆர். ஆரை நோக்கி ''ஏனையா, கொஞ்சநாட்களுக்கு உடம்பை அலட்டிக்காமல் அமைதியாகவீட்டில் இருக்கக்கூடாது?'' என்று செல்லமாக கடிந்துகொண்டார். அப்போது தாயின் பாசம் கலைஞரின் முகத்தில் இழையோடியது. உடல் நலம் குன்றியிருந்தகே. ஆர். ஆர். விழாவுக்கு வந்ததற்காகத்தான் இந்தக் கண்டிப்பு!

கே. ஆர். ஆர். அவர்கள் என்னைக் கலைஞருக்குமேடையில் வைத்து அறிமுகம் செய்துவைத்தார். சுதந்திரன் தம்முடைய இல்லத்துக்கு வருவதாகவும் தாம் அதைத் தவறுமல் படித்து வருவதாகவும் கலைஞர் தெரிவித்தார்.

''ஈழத்தமிழர்களின் ஆதரவை கழகத்துக்கு தெரிவிப்பதற்காக இங்கே நானும், எங்கள் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் அமிர்தலிங்கம் அவர்களும் இங்கு வந்திருக்கிறேம். உங்களைச் சந்திக்கமுடியாமல் அமிர்தலிங்கம் அவர்கள் திரும்பிவிட்டார்கள். மாறனைச் சந்தித்தோம். ஈழத்தமிழர்கள் 35 இலட்சம் பேருடைய விருப்பம் கழகம் அரசுகட்டிலில் இருக்கவேண்டுமென்பதே'' என்று எடுத்துக் கூறினேன்.

''ஆமாம், நீங்கள் நேற்று வீட்டுக்கு வந்ததாக மாறன் சொன்னான். கடந்த சில நாட்களாக வீட்டில் தங்குவதே இல்லை. ஓயாத தேர்தல் பிரச்சாரம். ஒன்றுக்கும் நேரமில்லாமல் இருக்கிறது. ஈழத்தமிழர்களின் சார்பில் கழகத்துக்கு நீங்கள் காட்டும் ஆதரவுக்கு எங்கள் நன்றி.''

இவ்வாறு கூறினர் கலைஞர் அவர்கள். இதற்கிடையில் ஏராளமானேர், கூட்டத்துக்கு நாள் கேட்டும், மற்றும் தேர்தல் விஷயங்களையொட்டி கலைஞரை மொய்த்தெடுத்தனர். அவர்களுக்கும் பதில் சொல்லிக்கொண்டே என்னேடும் பேசினர் கலைஞர். ஏராளமான 'ஆட்டோகிராப்' புத்தகங்களிலும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.

கலைஞரும் நானும் முதன் முதலாகச் சந்தித்த காட்சி இது. இதன்பின், தம்பி செல்வாவுடன் முதல்வரை சந்தித்த சுவையான காட்சியை அடுத்தவாரம் விபரிக்கிறேன்.

—தொடரும்.

## கிளிநொச்சி பட்டின சபை செல்வாவுக்கு பாராட்டு

புதிய அரசியல் அமைப்புக்குச் சாவல் விட்டு தமது பதவியை துறந்த 'காங்கேசன்துறை பா. உ. திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்துக்குப் பாராட்டுத்தெரிவிப்பதென்று கிளிநொச்சி பட்டின சபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.


அத்துடன் இங்கு நடைபெறும் இடைத்தேர்தலில் திரு. செல்வநாயகத்தைப் போட்டியின்றி அனுப்ப வேண்டுமென்று காங்கேசன்துறை மக்களைப் பகிரங்கமாகக்கேட்டுக்கொள்வதென்ற தீர்மானமும் இங்கு நிறைவேற்றப்பட்டது.

திரு. செல்வநாயகத்துக்கு கிளிநொச்சியில் பெரும் வரவேற்பு வைபவமொன்றை அளிப்பதென்றும் கிளிநொச்சிப் பட்டின சபை தீர்மானித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாஸ் ஸ்தாபனத்தின் மகத்தான தீபாவளி வெளியீடு!

இயக்குனர் திலகம் கே. எஸ். ஜியின் மற்றுமோர் சாதனை.
தமிழகத்தின் வெற்றிச்சித்திரம்.



இப்பொழுது நடைபெறுகிறது

கெப்பிட்டல்-பிளாசா-வெலிங்டன்-லிடோ
(கொழும்பு) (யாழ்நகர்)

சிவாஜி,
பத்மினி,
ஜெய்சங்கர்,
வாணிஸ்ரீ,
நம்பியார்,
நாகேஷ்,
ஜி. சகுந்தலா

ஆஸம் ஆர்ட்ஸ்

குலமா குணமா

திரைக்கதை-வசனம்-டைரக்ஷன்
K.S.கோபாலகிருஷ்ணன்

தயாரிப்பு: எம். ஆஸாம் பாடல்கள்: கண்ணதாசன் மற்றும் பலர் நடித்த

2வது வாரமாக

சென்ட்ரல் ஜெஸீமா ராணி
(யாழ்ப்பாணம்)

- சிவாஜி கணேசன்
- ஜெயலலிதா
- மனோரமா
- எம். ஆர். ஆர். வாசு
- வீ. கே. ராமசாமி, சுபா நடித்த

தற்பொழுது இந்தியாவில்
வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது



பட்டிக்காடா பட்டணமா

டைரக்ஷன்: பி. மாதவன் பாடல்கள்: கண்ணதாசன் இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

இப்பொழுது கெயிட்டி
மற்றும் இரு திரைகளில்

தீபாவளி-றம்ழான்
வெளியீடு



நூறாண்டு காலம் வாழ்க

3வது வாரம்
செல்லமகால்

சித்ராலயா
ஸ்ரீதரின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை
194 ஆம் இலக்கத்தில் 1972ம் வருடம் நவம்பர் மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.